Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு-40 | 10 ஆகஸ்ட் AUGUST 2007 | விலை:- 10.00

மக்களுக்காகச் செய்யப்படும் எந்த முயற்சியும் மக்களின் நம்பிக்கையெனும் பலனைப் பெறாமல் போய்விடுவதில்லை.

சே குவேரா

# இனப்பிரச்சனை தீர்வு யோசனைகள் தொடர்பாக 'ஸ்ருட்காட்' கருத்தரங்கு

### கருத்துக்கள்

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் திரு.த. சித்தார்த்தன்**

மேற்படி தலைப்பில் உரையாற்றிய தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் திரு.த. சித்தார்த்தன் அவர்கள் தனதுரையில் மக்களுக்கு தீர்வு எட்டப்படுவதில் அக்கறை கொண்டவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். இது மிகவும் ஆரோக்கியமான விடயம் என்றார். இலங்கையில் தற்போது என்ன நடைபெறுகிறது என்றால் அங்கு கொலைகள்தான் நடைபெறுகிறது.

அரசியல் தொடர்பாக சர்வகட்சி மாநாடுகள் மற்றும் தீர்வுத் திட்ட யோசனைகள், சர்வதேச அழுத்தங்கள் போன்றவை சமாதான தீர்வை கொண்டு வருவதில் முனைகின்றன. எந்த அரசும் தனியாக தீர்வை கொண்டுவர முடியாது. எதிர்கட்சியின் ஒத்துழைப்பின்றி தீர்வையெட்ட முடியாது. பாராளுமன்றத்தில் இரண்டில் மூன்று ஆதரவின்றி பாராளுமன்றத்தில் எந்தவொரு பிரேரணையையும் நிறைவேற்ற முடியாது. பல தடவைகளில் நான் கூறியிருக்கின்றேன். பிரபாகரன் எந்த சமயத்திலும் தமிழீழத்தை கைவிட மாட்டார். அதில் அவர் உறுதியாக இருக்கிறார்.




20 ஆயிரம் இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 10 ஆயிரத்துக்கும் அதிகமான மாற்று கருத்துடையவர்கள், அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தமிழீழத்தை கைவிட்டு புலிகள் ஒரு தீர்வை ஏற்க மாட்டார்கள் என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். சர்வதேச அழுத்தத்தினாலும், அரசினாலும் முன்வைக்கப்படுகின்ற தீர்வை புலிகள் ஏற்பார்களா? என்கிற கேள்வியும் எழுகின்றது.

சர்வதேச சமூகம் மீண்டும் பேச்சுவார்த்தை தொடர்பாக இரு தரப்பினரையும் வலியுறுத்தியுள்ளன. நோர்வே கூட சமாதான முயற்சிகளில் மீண்டும் இறங்கியுள்ளது. நோர்வே ஒரு பக்க சார்பாகவே கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எமது தோழர்கள் புலிகளால் கொல்லப்பட்டபோதும ஒரு பக்க சார்பாகவே இயங்கியிருப்பதை காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் நியாயமான முறையில் செயற்பட்டால் ஒரு தீர்வை எட்டக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும். எமது பிரச்சனையில் இந்தியாவின் ஒத்துழைப்பின்றி தீர்வை எட்ட முடியாது. மாவட்ட சபை தீர்வை அரசு தற்போது முன்வைத்திருக்கிறது. வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் மாகாணசபை இயங்கிக்கொண்டிருக்கிறது.

தீர்வுத்திட்டம் இரு கட்சிகள் உடன்பட்டு செய்யப்பட வேண்டியது. தீர்வை எட்டாத வகையில் புலிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்கள் சேர்க்கப்பட்டாலும் சிறு நிலத்தையாவது புலிகளால் மீட்க முடியவில்லை. கிழக்கு மாகாணம் புலிகளிடமிருந்து பறிபோய விட்டது. மூதூர் போன்ற பிரதேசங்களில் பல பகுதிகள் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு இன்று மக்கள் குடியேற முடியாத நிலைமை உள்ளது.

83 இல் பார்த்தசாரதி தனிநாடு சாத்தியமில்லை என குறிப்பிட்டிருந்தார். ஆயுதப்போராட்டத்தை முன்னெடுப்பதால் மக்கள் அழிவை சந்திப்பதை தவிர தீர்வையெட்ட முடியாது. பிரபாகரனுக்கும், மகிந்தாவிற்கும், ரணிலுக்கும் உள்ள கௌரவ பிரச்சனையாக தற்போதுள்ள நிலைமைகளை பார்க்க

தொடர்ச்சி 09ம் பக்கம்



மட்டக்களப்பில் தியாகிகள் தின நிகழ்வுகள் (19-06-2007)



சென்னையில் தியாகிகள் தின நிகழ்வுகள் (19-06-2007)



யாழ்ப்பாணத்தில் தியாகிகள் தின நிகழ்வுகள் (19-06-2007)



லண்டனில் தியாகிகள் தின நிகழ்வுகள் (19-06-2007)

# அமிர் நினைவாக

ஈழத் தமிழர் அரசியல் வானில் மக்கள் தலைவனாகக் கோலோச்சியவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள். அவர் 1989 ஜூலை 13ம் திகதி பலிகொள்ளப்பட்டதையடுத்து தமிழ்ச்சமூகம் அவரது கொலை பற்றி மௌனம் சாதிக்கிறது. நான்கு தசாப்தங்கள் (1949-1989) தலைக்கு மேல் தூக்கி வைத்துப் போற்றிய தலைவரது புகழ் சொல்லவும், நாமம் சொல்லி பேசவும், அவரது அளப்பரிய சாதனைகளைப் பதிவு செய்யவும் சமூகம் மிரளுகிறது.

மக்களின் உயிருடைமைகளை முதன்மைப்படுத்தி உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற மனித நேயமுள்ள தீர்க்க தரிசனம் நிறைந்த அமிர்தலிங்கம் அவர்கள் போன்ற



தலைவர்கள் சமுதாயத்தின் சொத்து. அத் தலைவர்களின் உயிரை பறித்தெடுப்பது அச் சமுதாயத்துக்கு இழைக்கப்படும் அநீதி ஆகும்.

-அமிர்தலிங்கம் சகாப்தம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணோட்டம்

# தமிழர்கள் மத்தியில் ஜனநாயகம்

தமிழர்களிடையே ஜனநாயகம் பற்றிய பிரக்ஞையற்ற போக்கு பரவலாகக் காணப்படுகின்றது. இதன் பாரதூரமான விளைவுகளை நாம் இன்று அன்றாடம் அனுபவித்து கொண்டிருகின்றோம். தீண்டாமை பெண்ணடிமைத்தனம் ஆகியவை தமிழர்களின் வாழ்வில் பாரம்பரியமாகவே நிலவுபவை. தீண்டாமைக்கு எதிராக இலங்கையின் இடதுசாரி இயக்கத்தினர் அறுபதுகளிலும், எழுபதுகளிலும் பல போராட்டங்களை யாழ் குடாநாட்டில் முன்னெடுத்துள்ளார்கள். தமிழ் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய இயக்கங்களில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி சமுக விடுதலை சார்ந்த உட்கூறுகளைப் பிரதானமாக கொணடிருந்தது. தீண்டாமை, பெண்ணொடுக்கு முறைக்கெதிரான இடையறாத இயக்கங்கள் எமது சமுகத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்று அக்கறை கொண்டிருந்தது.

தமிழகத்தில் உருவான பாரிய சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடியான பெரியார் ஈ.வெரா அவர்களும் இந்த இரண்டு பிரதான இயக்கங்களின அவசியத்தை இடையறாது வலியுறுத்தி வந்தவர்.

பல போராட்டங்கள் நடத்தப்பட்டு, பல இலக்கியங்கள் படைக்கப்பட்டு, அறிக்கையிடல்கள் நிகழ்த்தப்பட்டு இருந்தாலும் தீண்டாமையின் ஆணிவேர் செத்துவிடவில்லை. அது வெவ்வேறு வடிவங்களில் எமது சமுகத்தில் உலா வருகின்றது. நேரடியான தீண்டாமை ஒடுக்குமுறைகள் தவிர எமது சமுகத்தின் ஒரு பகுதியினர் இன்று துரோகிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களை உடல் மீதியின்றி அழித்தலும் நியாயப்படுத்தப்படுகின்றது. தீண்டாமை வேரோடிய தமிழ் கலச்சார பின்புலத்திலேயே தமிழ் பாசிசம் உருவெடுத்தது என்பதை இங்கு நாம மறந்துவிடக்கூடாது. எழுபதுகளின் நடுப்பகுதியில் சமூக அழிவின், சமூக தற்கொலையின் கூறுகளை உள்ளடக்கியதாக புலிகள் இயக்கம் உருவாகியது ஒன்றும் தற்செயலான நிகழ்ச்சியல்ல. அதற்கு முற்பட்ட தசாப்தங்களில் காணப்பட்ட தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்த அரசியல் துரோகிகள் ஒழித்துக்கட்டப்பட வேண்டியவர்கள் என்ற ஆபத்தான கருத்துருவையும் உள்ளடக்கியதாக இருந்தது. கருத்து மாறுபாடுடையவர்களை ஏக வசனத்தில் திட்டித்தீர்ப்பது என்ற போக்கு காணப்பட்டது. இந்த கருத்துருவின் ஆயுதம் தாங்கிய வடிவமாக பேரழிவு சக்தியாகவே புலிகள் இயக்கம் உருப்பெற்றது. யாழ் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவின் படுகொலை இதனைப் பிரதிபலிப்பதாகவேயிருந்தது. நாம் எல்லாவற்றையும் மறு பரிசீலனை செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஜனநாயக இடைவெளியை, இயங்கு தளத்தை நிராகரித்ததும் சகிப்புத்தன்மையற்ற ஈவிரக்கமற்ற போக்கும் தமிழ் சமுகத்தை ஒட்டுமொத்தமாக இன்று அழிவின் விளிம்பில் நிறுத்தியிருக்கின்றது. சமுகத்தின் ஒரு பிரிவினை ஒடுக்கும் மறு பிரிவினர் தமது கைகளில் தாமே விலங்கை மாட்டுகின்றார்கள். இந்த ஒடுக்கு முறை கருத்தியலை ஈழத்தமிழ் ஊடகங்கள் என்று சொல்லப்படுபவை இடையறாது பேணிவருகின்றன. தமிழ் பாசிசத்தால் துரோகிகள் என சித்தரிக்கப்படுபவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தி வருகின்றன. அவ்வாறு கொல்லப்பட்டவர்களை இனந்தெரியாதவர்கள் கொன்றார்கள் என்று இந்த கால் நூன்றாண்டு காலமும் இவை எழுதியும் சொல்லியும் வந்துள்ளன. கடந்து வந்த கால் நூன்றாண்டு காலத்தில் இலங்கையின் பிரதான தமிழ் தினசரிகள் எத்தனை படுகொலைகளை இனந்தெரியாதவர்கள் செய்தார்கள் என்று கூறிவந்திருக்கின்றனவோ அல்லது யார் யாருடைய படுகொலைகள் இந்த ஊடகங்களில் அலட்சியப் படுத்தப்பட்டு வந்துள்ளனவோ அவற்றை எல்லாம் கணக்கெடுத்தால் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சகோதரப்படுகொலைகளின் சமுகப்படுகொலைக்ளின் பட்டியலின் ஒரு பகுதியை நாம் தயாரித்து விட முடியும். இரத்தத்தை உறைய வைக்கும் பிரமாண்டமான ஒரு எண்ணிக்கை கணக்கு எம்முன் விரியும்.

தமிழ் பாசிசத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையையும், தமிழ் பாசிசத்தை ஆதரிக்கும் தமிழர்களின் எண்ணிக்கையையும் அவதானிக்கும் ஒருவருக்கு தமிழ் சமூகம் எத்தகைய காட்டுமிராண்டி வாழ்க்கையை நடத்துகின்றது என்பது தெளிவாகப் புலப்படும்.

இந்த ஈழத் தமிழ் பாசிசம் பிரதேச ரீதியாகவும், வெவ்வேறு இன சமூகங்கள் மீதும் தனது படுகொலைத் தாக்குதல்களையும் மேலாதிக்கவாத அச்சுறுத்தல்களையும் விடுத்து வந்துள்ளது. வருகிறது.

இதனால் அறிமுகப்படுத்தப்பட்ட கொலைக் கலாச்சாரம் எதிர்வினைகளாகவும், பிரதி விம்பங்களாகவும் இன்று பல்வேறு தரப்பினர்களாலும் பிரயோகிக்கப்படுகின்றன.

சிங்கள பேரினவாதமும், தமிழ் பாசிசமும் ஒன்றை ஒன்று போசித்து வருகின்றன. இந்த போசிப்பு தமிழ் சமுகத்தின பேரழிவாகவும், சமூகத்தை சிதறுண்டு போகச் செய்வதாகவும், சொந்த வாழ்விடங்களை இழத்தலாகவும், நாட்டை விட்டு தப்பி ஓடுதலாகவும், எமது நாட்டின் அனைத்து சமூகங்களினதும், நிம்மதியிழந்த, அமைதியிழந்த பதட்டமான கலவரமான வாழ்க்கையாகவும் மாற்றியிருக்கின்றது என்பதே உண்மையாகும்.

நாம் பாசிசம் ஆதிக்கம், செலுத்தும் காட்டுமிராண்டி வாழ்க்கைக்குப் பதிலாக ஒரு நாகரிகமான, மனித நேயமிக்க வாழ்விற்கான சிறு சுடர் ஒன்றை ஏற்ற முனைகின்றோம். யாருக்கும் யாரும் அடிமையில்லை இரண்டாம் தரமில்லை என்ற நிலையை ஸ்தாபிக்க முனைகின்றோம். மனித குல வரலாறு முழுவதும் பாரபட்சங்களை அநீதிகளை இல்லாது ஒழிப்பதற்கும் மனிதர்களின் வாழ்வு இப்பூமியில் சிறப்பாக இருப்பதற்குமான போராட்டங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. தற்போதும் உலகின் பல்வேறு பாகங்களிலும் இத்தகைய நீதிக்கான போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்த வகையிலேயே எமது பணியையும் நாம் ஆற்றிவருகின்றோம். காட்டுமிராண்டி தனத்திலிருந்து விடுபடுவதற்கும் மனித வாழ்வை பாரபட்சமற்றதாகவும், நீதியானதாகவும் அமைத்துக்கொள்வதற்காக உலக மானிடம் நிகழ்த்தி கொண்டிருக்கும் போராட்டத்தின் ஓர் அங்கமாகவே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

தற்போதைய பேரழிவுகளிலிருந்து மீண்டெழுந்து எமது மக்கள் சமாதானமாகவும், சுயமரியாதை, கௌரவத்தோடு தங்கள் சொந்த இடங்களில் சக சமூகங்களுடன் ஐக்கியமாக, சகோதரத்துவமாக வாழ்வதற்கான நிலையை எய்துவதே எமது கனவு.

# வரலாற்றில் தடம் பதித்த தோழர்களை நினைவு கூருவோம்



தோழர் பாலா வந்தாறுமூலை



தோழர் கனகலிங்கம
வவுனியா



தோழர் நடேசலிங்கம்
பெரியதம்பனை

28.11.1981 அன்று வவுனியாவில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்



தோழர் தேவகுமார்
நற்பிட்டிமுனை



தோழர் பாஸ்கரன்
கல்முனை

27.07.1983 அன்று வெலிகடைசிறையில் படுகொலை செய்யப்பட்டனர்



தோழர் பீற்றா
திருமலை



தோழர் தருமன்
நெடுந்தீவு



தோழர் சுந்தர்
சாம்பல்தீவு



தோழர் ரஞ்சித்
தம்பிலுவில்



தோழர் செல்றின்
இடைக்காடு



தோழர் தைரி
நற்பிட்டிமுனை



தோழர் அண்ணாமலை
கொடிகாமம்



தோழர் மஜீத்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த தோழர் மஜீத் (ஆ. மோகனேஸ்வரன்) ஈ.பி.ஆர்.எல்.எவ் தொலைத்தொடர்பு பிரிவில் பொறுப்பான பதவியை வகித்தவர். 1986 மார்கழி 13 இல் புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது தாக்குதல் தொடுத்த வேளை சாவகச்சேரியில் தங்கியிருந்து பணி புரிந்தவர். சம்பவம் பற்றி அறிந்ததும் தனியாளாக தொலைத்தொடர்பு கருவிகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார். சரணடைபவர்களை மன்னித்து விடுவதாக புலிகள் விடுத்த அறிவிப்பை கேட்ட அவரது உறவினர்கள் தோழர் மஜித்தை தமக்கு அறிமுகமான புலிகளின் பசப்பு வார்த்தைகளை நம்பி புலிகளின் முகாமில் ஒப்படைத்தனர். ஆயினும், புலிகள் அவரை பல மாதங்களாக தடுத்து வைத்திருந்து பலத்த சித்திரவதைக்குள்ளாக்கினர். பங்குனி 30ம் திகதி புலிகளின் சிறையில் தடுத்துவைத்திருந்த இதர தோழர்களுடன் சேர்த்து அருணாவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தாமரைச்செல்வி [பானு]
பாலைக்குளி, அடம்பன்.
மலர்வு: 22-08-1967
உதிர்வு: 13-07-1986

தாமரைச் செல்வி,
ஈழப் பெண்களில்
இடர்கள் களைந்திட
இன்னுயிர் ஈந்த எங்கள்
நெஞ்சமே
வஞ்சகர் மததியில
வஞ்சியர் வாழ்ந்திட
வழிவகை காட்டிய
அன்புவடிவமே
ஈழமக்களின் புரட்சி
விடுதலைக்கு
முன்னணி வகுத்த நின்
பணிகண்டு ஈழமக்கள்
இன்புற்றிருந்த வேளை,
அகன்ற வானில்
அழகாய் ஜொலித்த
நட்சத்திரம்
இடை நடு வேளையில்
உதிர்ந்ததுபோல
விடுதலை வேள்வியில்
நின் பலிகண்டு
எங்கள் இதயம்
கொட்டுது உதிரம்



தோழர் நகுலன்

யாழ்ப்பாணம் கோப்பாயில் பிறந்தவரும் தற்காலிகமாக வவுனியாவில் வசித்து வந்தவருமான தோழர் நகுலன 16.09.2005 அன்று ஜனநாயக விரோத சக்திகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
1983 பிற்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் இணைந்துகொண்ட இவர் மனிதாபிமானம் மிக்க சமூக சேவையாளராகவே எல்லோராலும் அறியப்பட்டார். பல்வேறு நெருக்கடிகள் துன்பங்கள் மத்தியிலும் பணத்திற்காக விலை போகாதவராயிருந்தார்.
1998 இல் இடம்பெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலின் போது வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டு மககளின் அபிமானத்துடன அப்பிரதேச சபை உறுப்பினராகத் தெரிவானவர். தமிழ் இனத்திற்கோ, தேசத்திற்கோ தனது எண்ணத்தாலும், செயலாலும் தீங்கிழைத்திராத சிறந்த தோழன். அன்போடும், மரியாதையோடும் மக்களுடன் பழகி நன்மதிப்பைப் பெற்றவர்.



தோழர் தாசன்



தோழர் ஜெராட்

யாழ்ப்பாணம் மயிலிட்டியைச் சேர்ந்த தோழர் தாசன் கட்சியின் ஆரம்பகால ஊழியர். அவர் மாத்திரமன்றி அவரது குடும்பத்தினரும் கட்சியின் வளர்ச்சிக்கு பககபலமாக இருநதார்கள். இதனால் பல இன்னலகளுக்கு முகங்கொடுத்தவர்கள் 1986 இல் புலிகள் அவரை கைதுசெய்து சுட்டுக்கொன்றனர். அவரது மைத்துனர் ஜெராட்டும் புலகளால் படுகொலை செய்யப்பட்டார். இருவரும் ஈ.பி. ஆர்.எல்.எவ் இன் கடற் போக்குவரத்து விவகாரங்களில் அளவிடற்கரிய பங்களிப்பை வழங்கயவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



தோழர் சாந்தி
திருகோணமலை



றூபி அன்ரி
மானிப்பாய்

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் பயங்கரவாதத்தை கைவிட்டு ஜனநாயக வழிமுறைக்கு வரவேண்டும். அத்துடன் அரசு யுத்தம் பற்றி யோசிக்காமல் அரசியல் தீர்வு பற்றி யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர்

மதச்சார்பற்ற அரசு என்ற கொள்கை பற்றிப் பேசுவதற்கு கூட இலங்கையில் இடம் இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பங்காளிக் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டியூ குணசேகர கவலை தெரிவித்ததுடன் இந்து ராச்சியமான நேபாளத்தின் ஆட்சியில் மாவோயிஸ்ட்டுகள் பங்கேற்று அந்த நாடு மதச்சார்பற்ற அரசை நோக்கி நகர்வதை முன்னுதாரணமாக கொள்ள முடியாத நிலைமை இங்கு இருக்கின்றதென்ற ஆதங்கத்தையும் மறைமுகமாக வெளிப் படுத்தினர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 64 ஆண்டுகால நிறைவை முன்னிட்டு பொரளை சுகிஸ்வர மண்டபத்தில் தேசிய சர்வதேச அரசியல் நிகழ்வுகள் எனும் கருப்பொருளில் உரையாற்றிய டியூ. குணசேகர நேபாள அரசியல் மாற்றத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) ஆற்றிய பங்களிப்பினையும் குறிப்பாக சீத்தாராம் ஜெச்சூரியின் முன்முயற்சியையும் பெரிதும் சிலாகித்தார்.

அவர் தமதுரையில் தொடர்ந்தும் தெரிவித்ததாவது தேசிய இனப்பிரச்சினை 1956இல் ஆரம்பமானது. இம்மாதம் முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களுக்கு இரண்டு மொழிக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுளளது. இது 50 ஆண்டுகளுககுப் பின் செய்த மிகப் பெரிய காரியமாகும்.

**பிரச்சினை பற்றி ஆராயும் போது தேசிய சர்வதேச நிலைமைகள் பற்றி பகுப்பாய்வு செய்தே முடிவெடுக்க வேண்டும். கொழும்பு லொஸ்களிலிருந்து தமிழர்களை வெளியேற்றியமையானது அரசாங்கம் செய்த மிகப்பெரும் தவறாகும். இதனால் அரசுக்கு மிகப்பெரிய அவமானம் ஏற்பட்டதுடன், உலகம் பூராகவுமுள்ள தமிழர்கள் புலிகளுக்கு ஆதரவேற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.**

1982ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு அவர்கள் பிரிந்துபோய் தனி அரசு அமைப்பதற்கும் உரிமையுண்டு என்று ஜே.வி.பி. யின் தலைவர் ரோஹன விஜயவீர தெரிவித்ததனால் அதிகமான வாக்குகள் கிடைத்தன. இப்போது அக்கட்சியின் போக்கு மாறியுள்ளது.

இந்தியாவில் மிக நீண்டகாலம் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியின தற்போதைய இருப்பை தீர்மானிக்கின்ற சக்தியாக மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளது.

வெனிசுலாவில் தற்போது ஆட்சியை மீண்டும் கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றி ஜனாதிபதியாக ஹியூகோ சாவேஸ் உள்ளார். இன்று உலகம் முழுவதும் மீண்டும் சோஷலிச முகாம்கள் வளர்ந்து வருகின்றன.

பிரச்சினை பற்றி ஆராயும் போது தேசிய, சர்வதேச நிலைமைகள் பற்றி பகுப்பாய்வு செய்தே முடிவெடுக்க வேண்டும். கொழும்பு விடுதிகளிலிருந்து தமிழர்களை வெளியேற்றியமையானது அரசாங்கம் செய்த மிகப் பெரும் தவறாகும். இதனால் அரசுக்கு மிகப்பெரிய அவமானம் ஏற்பட்டதுடன், உலகம் பூராகவுமுள்ள தமிழர்கள் புலிகளுக்கு ஆதரவளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எங்களின் வேண்டுகோள் என்னவென்றால் புலிகள் பயங்கரவாதத்தை கைவிட்டு ஜனநாயக வழிமுறைக்கு வரவேண்டும். அத்துடன் அரசு யுத்தம் பற்றிய யோசிக்காமல் அரசியல் தீர்வு பற்றி யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

மேலும் ஜே.வி.பி. இனவாத போக்கைக் கைவிட்டு தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தமது கொள்கையில் மாற்றம் கொண்டுவர வேண்டுமென்பதுடன் இடதுசாரி அணியில் இணையுமாறு நாம் கேட்கின்றோம்



இதேவேளை தேசிய இனப்பிரச்சனைக்கு பிரதான கட்சிகளான ஐ.தே.க., ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டும் பொறுப்புக கூற வேண்டும். ஆனால் இனப் பிரச்சனைக்கு புத்திசாலித்தனமான தீர்வுக்கு உதவ வேண்டுமென்றார்.

# அபிமன்யு பதில்கள்

**ந. சாந்தலிங்கம் — லண்டன்**

கேள்வி:- புலிகளின் மறைந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலண்டனில் வாழும்போது அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத பிரித்தானியா அரசாங்கம், ஏன் இப்பொழுது விடுதலைப் புலிகளின் இலண்டன் பிரதிநிதியை ஒரு தடைசெய்யப்பட்ட இயககத்திற்காக செயலபட்டதாகக் குற்றஞ்சாட்டிக் கைது செய்திருக்கிறார்கள்?

பதில்:- பாலசிங்கம் பலே கில்லாடி! கெட்டித்தனமாக வாழத் தெரிந்தவர். அவர் பிரித்தானியாவின் உளவுத் துறையினருடன் நட்பைப் பேணி வந்திருப்பார். அதனால் அவர் தங்களுக்கு 'பிரயோசனமானவர்' எனக் கருதி அவர்கள் கண்டும் காணாதது போல் இருந்திருக்கலாம். ஆனால், விடுதலைப் புலிகளின் இலண்டன் பிரதிநிதிக்கு பாலசிங்கத்தின் கெட்டித்தனம் கிடையாது. பொதுவாகவே, புலி ஆதரவாளர்கள் அடிக்கடி "பிரிட்டிஷ் அரசு எங்களை ஒன்றும் செய்யாது" என்று வீம்பு பேசி "தமிழர் உரிமை" என்ற போர்வையில் "புலிகளின் உரிமை" கோரி நடாத்திய ஆர்ப்பாட்டங்கள், நிதி வசூல்கள் ஆகியவற்றின் பிரதிபலன்தான் பிரித்தானிய அரசின் இந்த சமீபத்திய நடவடிக்கை! இலண்டன் உளவுத் துறையினர் பதுங்கியிருந்து பாய்ந்து விட்டனர். இலண்டன் புலிகள் எலிகளாகி விட்டனர்!

**க. மரிக்கொழுந்து — வெள்ளவத்தை**

கேள்வி:- போர் நிறுத்த உடன்படிக்கையை இப்பொழுதும் தொடர்ந்து மதித்து வருகின்றோம் என கூறி வருகின்றனரே?

பதில்:- இந்த வேண்டாத யுத்தத்தினால் நாளாந்தரம் கொலை செய்யப்படுவோரின் உற்றாரும், உறவினரும் அல்லலுற்று அவதியுறும் மக்களும் வடிக்கும் ஆற்றொணாக் கண்ணீர் பதில் சொல்லும்.

**ப. அருளானந்தம் — கொட்டாஞ்சேனை**

கேள்வி:- கொழும்பு விடுதிகளிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டது பற்றி?

பதில்:- பல்வேறு தரப்பினரதும் கண்டனத்திற்குள்ளான அந் நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் என்ன சாதிக்க நினைத்தார்களோ தெரியவில்லை! ஒரு வேளை, 'புலிகள் இருப்பதனால்தான் இப்பொழுதெல்லாம் கொழும்பில் தமிழர் வாழ முடிகிறது' என மார்தட்டித் திரிந்த சில புலிசார்பு தமிழர்களுக்கு, ஒரு 'பாடம்' படிப்பிக்க நினைத்திருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. எதுவாயினும், அந்த இருளிலும் சில ஒளிக்கீற்றுக்கள் தென்பட்டன. மக்கள் உடனேயே திரும்ப வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி ஜனாதிபதி உத்தரவிட்டது; இந் நிகழ்வுக்காக அரசு முழுப் பொறுப்பையும் ஏற்பதாகக் கூறி பிரதம மந்திரி மன்னிப்புக் கோரியது; இதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது, இந் நடவடிக்கை சட்ட விரோதமானது எனவும் அதனை உடனே நிறுத்துமாறும் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது; இது தமிழர்களுக்கு இழைத்த அநியாயம் என தமிழர் விரோதக் கட்சி என பெயரெடுத்திருக்கும் ஜே.வி.பி. பாராளுமன்றத்தில் முழங்கியது குறிப்பிடக் கூடிய விடயங்களாகும்.

கொழும்பில் தமிழர்கள் வாழும் இடங்களில் ஊடுருவி குண்டுகளை வெடிக்க வைத்தும் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியும் சிங்கள மக்களை தமிழர்கள் மேல் ஆத்திரம் கொள்ள வைத்து இன்னுமொரு இனக் கலவரத்தை தூண்டுவதற்கு முனையும் புலிகளின் செய்கைகளை கண்டிக்காத கூட்டமைப்பு பாராளுமன்றப் பிரதிநிதிகளும் இதனை கண்டித்தனர். இதன் மூலம் அரசுக்கெதிராக கண்டனங்களை தெரிவித்த பின்னரும் கொழும்பில் வாழ முடியும். ஆனால், புலிகளைக் கண்டித்துவிட்டு எங்குமே வாழ முடியாது என்ற உண்மையை மீண்டும் புலப்படுத்தியுள்ளனர்.

**ஆ. சிவபாலன் — யாழ்ப்பாணம்**

கேள்வி:- ஆயுதங்களைப் பதுக்கி வைப்பதற்கு இந்துக் கோயில்களை பயன்படுத்துவதோடு இந்துக் கோயில்களின் பூசகர்களையும் புலிகள் படுகொலை செய்து வருகின்றனரே?

பதில்:- இந்துக் கோயில்களும் இந்துக் கோயில் பூசகர்களும் பாதிக்கப்பட்டால் யாருமே தட்டிக்கேட்கப் போவதில்லை என்பது புலிகளின் துணிவு.

**ஏச்.எம். முகமட் — களுவாஞ்சிக்குடி**

கேள்வி:- கிழக்கு மாகாணத்தில் பல பகுதிகள் இலங்கை அரசினால் பாதுகாப்பு பிராந்தியங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளனவே?

பதில்:- பல ஆண்டுகளுக்கு முன்னர், கிழக்கு மாகாணத் தமிழ்ப் பகுதிகளில் இலங்கை அரசுகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வந்தன. தமிழ்க் கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக இலங்கை அரசுகள் அவற்றினை ஓரளவிற்கு குறைத்தும் நிறுத்தியும் வைத்திருந்தன. இப்பொழுது இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் தமிழ் மக்களை சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் பிறிதொரு வடிவமாகவே கருதப்படுகின்றது. அன்று நடந்தது குடியேற்றம் (coloni sation) இப்பொழுது நடப்பது குடிபெயர்ப்பு (depopulation) தமிழர்களின் புலம்பெயர்வும் இந்தக் குடிப் பெயர்வின் ஒரு அங்கமே! இன்னும் யுத்தம் தொடர்ந்தால் தமிழ்ப் பகுதிகள் பலவும் சூனியப் பிரதேசங்களாகி விடும். "நாம் மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை, மக்களுக்காகவே மண்ணை நேசிக்கின்றோம்" என்ற அமரர் தோழர் பத்மநாபாவின் கூற்றில்தான் எவ்வளவு உண்மை! எத்தனை தீர்க்க தரிசனம்! கேட்டார்களா தமிழ்மக்கள்!- கேட்க விட்டார்களா தமிழ் மக்களை!

**தி. ஆனந்தகுமாரசாமி — திருகோணமலை**

கேள்வி:- இலங்கையில் நடைபெறும் இந்த யுத்தம் யாருக்காக?

பதில்:- நிச்சயமாக தமிழ் மக்களின் நலனிற்காகவோ அன்றி சிங்கள மக்களின் நலனிற்காகவோ அல்ல! இந்த யுத்தம் புலிகளின தலைமைத்துவத்திற்கு அவர்களின் இருப்பை (கவனிக்கவும்- தமிழ்மக்களின் இருப்பை அல்ல) தக்கவைத்துக் கொள்வதற்காகத தேவைப்படுகிறது; சிங்களப் பேரினவாதத்திற்கு இலங்கையில் தமிழ்மக்களின் இருப்பை நிலைகுலையைச் செய்வதற்கு தேவைபடுகிறது. எனவேதான் புலிகள் சிங்களப் பேரினவாதத்தை வளர்க்கிறார்கள்; சிங்களப்பேரினவாதம் புலிகளை வளர்க்கின்றது!

**வி. திருலோகநாதன் — மட்டக்களப்பு**

கேள்வி:- போரினால் ஏற்படும் இழப்புகளின் விபரம் பற்றி புலிகளினால் ஒரு எண்ணிக்கையும், இலங்கா அரசினால் வேறொரு எண்ணிகையும் வெளியிடப்படுகின்றனவே?

பதில்:- "The First Casualty of War is the Truth" (யுத்தத்தில் முதல் பலியாவது உண்மை") என்று ஆங்கிலத்தில் ஒரு சொல்வழக்கு இருக்கின்றது. புலிகளும் அரசும் தமது தாக்குதல்களை மிகைப்படுத்தியும் இழப்புகளை குறைத்தும் மறைத்தும் கூறிவருகின்றனர். இதில் மிகவும் வேதனையானது, இப் போரில் மரிக்கும் மனித உயிர்களில் அதிகமானோர்- அது புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களின் உயிர்களாக இருக்கலாம், அல்லது அரசபடைகளைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களது உயிர்களாக இருக்கலாம்- ஏழ்மையில் வாழும் சமூகத்தின் அடித்தளத்திலிலுள்ள மனித வர்க்கத்தினரே!- நாமெல்லோரும் ஏதோ கிரிக்கெட் பந்தயத்தில் வெளியிடப்படும் ஆட்ட விபரங்களின் எண்ணிக்கை போன்று அவற்றினை குறிப்பிடுமளவிற்கு கிஞ்சித்தும் மனித நேயம் அற்றவர்களாகி விட்டோம்.

**ப. பத்மநாதன் — கனடா**

கேள்வி:- கனடாவில் ரொரன்றோ பல்கலைக்கழக மண்டபத்தில் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலின் சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்தபோது புலிகளைச் சார்ந்த தமிழ் இளைஞர்கள் சிலர் காடைத்தனம் செய்ய முயன்றார்களாமே?

பதில்:- ஆமாம்! நானும் அந்தச் செய்தியைப் படித்தேன். பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலின் கல்வித் தகுதியில் ஒரு இம்மியளவும் இந்தக் காடையர்களுக்கு கிடையாது. அதனால்தான் என்னவோ இவர்களுக்கெல்லாம் கல்வி கற்றோரைக் கண்டால் ஒரு வெறுப்பு. இது ஒரு வித மனநோய்! கருத்துக்களை கருத்தினால் எதிர்கொள்ள இயலாத இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் கோழைத்தனமாக 'இரண்டு போட' முனைவது, முடிந்தால் 'மண்டையில் போடுவது'. அவர் இலங்கையை விட்டுச் செல்ல நேர்ந்தது ஈழத்தமிழ் மாணவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு; கனடாவிற்கு மிகுந்த இலாபம்.

# பெற்றோருக்கு எழுதிய கடிதம் -சே-




என் அன்பிற்குரியவர்களே,

கேடயத்துடன் என் பயணம் மீண்டும் தொடர்கிறது.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இதேபோல் விடைபெற்று, உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதில், நான் ஒரு சிறந்த படை வீரனாகவும், சிறந்த மருத்துவராகவும் இல்லாமல் இருந்ததற்காக வருந்தி எழுதியிருந்ததை இப்பொழுது நினைவு கூர்கிறேன். இன்று, நான் அத்தனை மோசமான ஒரு படைவீரன் அல்ல.

எனது நம்பிக்கை மேலும் உறுதியடைந்துள்ளது. என்னுடைய மார்க்சியம் ஆழமானதாகவும் தூய்மையானதாகவும் மாறி விட்டது. சுதந்திரத்துக்காகப் போராடும் மக்களுக்கு ஒரே வழி, ஆயுதப் போராட்டம்தான் என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன். அந்த நம்பிக்கையின்படி நடக்கிறேன்.

சிலர், என்னை ஒரு சாகசகாரன் என்று அழைக்கலாம். நான சாகசகாரன்தான். ஆனால் ஒரு வித்தியாசம் தன்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கைகளை நிரூபிப்பதற்காகத் தன்னையே அர்ப்பணம் செய்து கொள்ளத் தயங்காத சாகசக்காரன்.

இதுவே என்னுடைய கடைசிக் கடிதமாகவும் இருக்கலாம். நடக்க இருப்பதைத் தர்க்க ரீதியாக ஆராய்ந்து பார்த்தால், அப்படித்தான் தோன்றுகிறது. ஒரு வேளை அப்படி நடந்துவிடும் எனில், இப்போதே என்னுடைய தழுவலை ஏற்றுக்கொள்ளுங்கள்.

நான் உங்கள் அனைவரையும் ஆழமாக நேசிக்கிறேன். என்னுடைய நேசத்தை எப்படி வெளிப்படுத்துவது என்றுதான் தெரியவில்லை.

என்னுடைய வழியில் நடப்பது என்பதில் நான் தீர்மானமாக இருக்கிறேன். ஆனால், பல சமயங்களில் நீங்கள் என்னைச் சரிவர புரிந்து கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன் ஒருவேளை, என்னைப் புரிந்து கொள்வது கடினமான காரியமாக இருந்திருக்கலாம். ஆனால், இப்போதைக்கு என் மீது நம்பிக்கை வையுங்கள். அது போதும் எனக்கு.

எனது கால்கள் தொய்ந்து விட்டன. நுரையீரல்கள் ஓய்ந்து விட்டன. ஆனால் என் மன உறுதி, எல்லாவற்றையும் சரி செய்யும்.

இருபதாம் நூற்றாண்டின் இந்தச் சிறிய போராளியை அவ்வப் போது நினைத்துக் கொள்ளுங்கள்.

அன்பு தாய், தந்தையே! உங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்காத இந்தத் தறுதலைப் பிள்ளை உங்கள் இருவரையும் தழுவிக் கொள்கிறான். ஏற்றுக் கொள்ளுங்கள்.

-எர்னஸ்டோ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீறப்படும் மனித உரிமையும் தமிழர் பிரச்சினையும்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - மார்க்சிஸ்ட் (சி.பி.ஐ-எம்) இன் தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கிறார் அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் உ.ரா. வரதராஜன்**

இலங்கையில் கடந்த 1983 ஆம் ஆண்டு சிங்கள இன வெறியர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய இனப்படுகொலையைத் தொடர்ந்து இன்றுவரை இலங்கைத் தமிழர் பிச்சினை எந்த தீர்வும் காணப்படமுடியாத துயர நிகழ்வாகத் தொடர்கிறது.

ஒரு பக்கம் இலங்கை அரசும் மறு பக்கம் விடுதலைப்புலிகள் இயக்கமும நேருக்கு நேர் இராணுவ மோதல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதானது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைச் சிக்கலாக்கியுள்ளது. இந்த இருதரப்புக்குமிடையே நோர்வே நாடு ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டு போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு பேச்சுவார்த்தைகளும் பல கட்டங்களில் நடந்து வந்துள்ளன. ஆனால் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் அவ்வப்போது மேற்கொணடுவரும் இராணுவத் தாக்குதல்கள் இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கையை கிட்டத்தட்ட புதைகுழிக்கு அனுப்பிவிட்டன.

### கண்டனத்துக்குரிய நடவடிக்கை

இந்தப் பின்னணியில் இலங்கை அரசு அண்மையில் எடுத்த ஒரு நடவடிக்கை மிகுந்த கண்டனத்துக்குரியது. கடந்த ஜுன் 7 அன்று கொழும்பு நகரின் பல்வேறு தங்கும் விடுதிகளில் இருந்த 376 தமிழர்களை இலங்கை அரசின் காவல்துறை வலுக்கட்டாயமாக வெளியேற்றி தமிழர் பகுதியின் மட்டக்களப்பு மற்றும் வவுனியாவில் உள்ள அவர்களின் சொந்த ஊர்களுக்கு குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று விட்டு வந்தது. இவர்கள் அனைவரும் வேலையற்றவர்கள் என்றும் இவர்கள் கொழும்பு நகரில் தங்கியிருப்பது ஒரு பாதுகாப்பு அபாயம் என்றும் இலங்கையின் காவல்துறை தனது நடவடிக்கைக்கு ஒரு சொந்தக் காரணத்தை முன்வைத்தது.

உண்மையில் இலங்கை அரசின் இந்த நடவடிக்கை ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறலேயாகும். வெளியேற்றப்பட்ட 376 தமிழர்களும் இலங்கையின் குடியுரிமை பெற்றவர்கள். அவர்களுக்குத் தங்களது சொந்த நாட்டின் தலைநகரான கொழும்பில் தஙகுவதற்கு சகல உரிமையும் உண்டு கொழும்பு நகரில் வேலையில்லாத சிங்களவர்கள் பலரும் இருக்கையில் வேலையற்றவர்கள் என்ற காரணத்துககாக இந்தத் தமிழர்கள் மட்டும் வெளியேற்ற நடவடிககைக்கு இலக்காக்கப் பட்டது. இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற, சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறலாகும்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக "மாற்றுக் கொள்கைககான மையம்" என்ற ஒரு தன்னார்வ நிறுவனம் இலஙகை உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்தது இலங்கை உச்ச நீதிமன்றம் பாராட்டத் தக்கதொரு இடைக்கால உத்தரவைப பிறப்பித்து இலஙகை காவல்துறையின இந்த வெளியேற்ற நடவடிக்கைக்கு இடைக்கால தடை விதித்தது. இலங்கை அரசின் இந்த மனித உரிமை மீறல் நடவடிக்கைக்கு எதிராக உலகம முழுவதிலும் எழுந்த கண்டனக் குரலுக்கு இலங்கை உச்சநீதி மன்றத்தின் உத்தரவு மேலும் வலுவூட்டியது.

### பா.ம.க நிறுவனர் பேட்டி

இந்தப் பின்னணியல் தமிழ்நாட்டிலும் இந்தக் கண்டனம் எதிரொலித்தது இயல்பானதே இவ்வாறு எதிரொலித்த குரல்களில் ஒன்று பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாசு அவர்களுடையது. "இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். ஈழத் தமிழர்கள் மனித உரிமை அரசியல் உரிமையோடு வாழ வேண்டுமென இந்தியா விரும்பினால் அதற்கு ஒரே தீர்வு தமிழர் பகுதியில் தமிழர்கள் சுய அதிகாரத்துடன் வாழவேண்டும். இதைத் தவிர வேறு தீர்வு தெரியவில்லை" தைலாபுரம் தோட்டத்தில் ஜுன் 14 அன்று பாமக நிறுவனர் அளித்த பேட்டி இது. தினமணி ஜுன் 15 இதழில் வெளியான இந்தப் பேட்டியில் அவரது கருத்தாக இடம்பெற்ற மேலும் இரண்டு வாசகங்கள் மிக முக்கியமானவை.

### "தனி ஈழம்தான் இப்பிரச்சனைக்குத் தீர்வு"

"இலங்கையின் இறையாண்மையைப் பற்றிக் கவலைப்படும் கட்சிகள் இதைப்பற்றி சிந்தித்துக் குரல் கொடுக்க முன்வரவேண்டும்" என்பவையே அவை! அதே நாளில் வெளியான தமிழ் ஓசை இதழில் மேற்குறிப்பிட்ட வாசகங்கள் இடம் பெறவில்லை என்றாலும் தினமணி செய்திக்கு பாமக தரப்பில் மறுப்பு எதும் வெளியானதாகத் தெரியவில்லை. எனவே இது பாமக நிறுவனரின் கருத்து என்றே கொள்ளலாம். எனினும் இது அவரது கருத்து இல்லை என்றாலும் வேறு சிலரது கருத்தாக இருக்கக்கூடும் என்பதால் இதற்கு விளக்கம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

### மூன்று நிலைபாடுகள்

இலங்கைத் தமிழர் பிரச்சனையில தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் எடுத்து வந்துள்ள நிலைப்பாடுகளை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தொடர்ந்து உறுதியாக எடுத்து வந்துள்ள நிலைப்பாடு. இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு என்பது சாத்தியமில்லை. அரசியல் தீர்வு காண்பதே சாலச்சிறந்தது. ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளாக வடக்கு-கிழக்கு மாகாணங்களின தமிழர் பகுதிகளுக்குப் பரவலான சுயாட்சி அதிகாரம் வழங்கப்படுவதை உத்தரவாதம் செய்யும் வகையில் அந்த அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே அந்த நிலைப்பாடு.

1983இல் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நடந்ததைத் தொடர்ந்து அன்றைய தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் தலைமையில் தலைநகர் தில்லிக்குச் சென்ற அனைத்துக் கட்சிக் குழு அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் கோரிக்கை ஒன்றை வைத்தது. இந்திய அரசு தனது படைகளை அனுப்பி தமிழ் ஈழம் தனிநாடாக உருவாவதற்கு உதவ வேண்டும், அது ஒன்றே இலங்கைத் தமிழர் பிரச்சனைககு இறுதித் தீர்வு பயக்கும் என்பதே அந்தக் கோரிக்கை. அன்று அனைத்துக் கட்சிக் குழுவில் தில்லி சென்று பிரதமரைச் சந்தித்த தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் அனைத்தும் இந்தக் கோரிக்கைக்கு



இசைவு தெரிவித்தபோது மார்க்சிஸ்ட் கட்சி மட்டுமே அதற்கு மாறுபாடான நிலை எடுத்தது. மார்க்சிஸ்ட் கட்சியின மூத்த தலைவர் பி. ராமமூர்த்தி தனியாக பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்து இலங்கைக்கு இந்தய இராணுவத்தை அனுப்புவது விவேகமான நடவடிக்கை ஆகாது. அது சர்வதேச அரங்கில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்:

எனவே இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண இந்தியா ஆக்கப் பூர்வமான ராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர். ஏறத்தாழ இருப்பதைந்தாண்டுக் காலம் கடந்த பின்னரும் மார்க்சிஸ்ட் கட்சியின் இந்த நிலைபாடு மாற்றமின்றித் தொடர்கிறது.

2. அன்றைய காலகட்டத்தில் தமிழ ஈழம் - தனிநாடு என்ற நிலைபாட்டை எடுத்த இதர கட்சிகளில் அ.தி.மு.க., காங்கிரஸ், தி.மு.க., சி.பி.ஐ ஆகிய கட்சிகள் ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பின் தங்களது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டன. இதைத்தான் இன்றைய தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்தில் கி.மு, கி.பி என்பதுபோல ராஜீவ்காந்தி படுகொலைக்கு முன்னரும் பின்னரும் என்று சுட்டிக்காட்டினார். இவ்வாறு தங்களின் நிலைபாட்டை மாற்றிக்கொண்ட இந்தக் கட்சிகளில் காங்கிரசும், அஇஅதிமுகவும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான கடுமையான நிலையை எடுத்து விமர்சித்து வருகின்றன.

தனிநாடோ சுயாட்சியோ- அங்குள்ள தமிழர்களுக்கு [illegible] அதை ஆதரிக்கிறோம் என்று தி.மு.க நிலை எடுத்துள்ளது. சி.பி.ஐ விடுதலைப் புலிகளை விமர்ச்சிப்பதில் தயககம் காட்டுவதுபோலத் தோன்றினாலும அரசியல் தீர்வு என்பதற்கே முக்கியத்துவம் அளிக்கிறது.

3. அன்றைய கட்டத்தில் தனிக்கட்சியாகப் பரிணமிக்காத இன்றைய அரசியல் கட்சிகளாக மதிமுக, பாமக மற்றும் "தனித் தமிழ் ஈழம்" என்பதை ஏற்றுக்கொண்ட திராவிடர் கழகம், தமிழ் தேசிய காங்கிரஸ் (பழ நெடுமாறன்) இவையன்றி பல்வேறு நக்சலைட் குழுக்களும் முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளை ஆதரித்து "தனித் தமிழ் ஈழம்" என்ற நிலைப் பாட்டை எடுத்துவருகின்றனர்.

### விமர்சனங்களும் விளக்கமும்

இந்த மூன்றாவது நிலைபாட்டுக்குச் சொந்தக்காரர்கள் தான் மார்க்சிஸ்ட் கட்சியை- சிலர் வெளிப்படையாகவும் சிலர் மறைமுகமாகவும்- இலங்கைப் பிரச்சனையை மையமாக வைத்து கடுமையாக விமர்சிக்கின்றனர். இலங்கைத் தமிழர் நலன்களைப் பாதுகாப்பதைவிட இலங்கையின் இறையாண்மையைப் பற்றியே மார்க்சிஸ்ட்டுக்கள் அதிகம் கவலைப்படுகிறார்கள் என்பது இவர்களின் குற்றச்சாட்டு.

இவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்றால் அது விடுதலைப்புலிகள் மட்டுமே என்று கருதுகின்றனர். இது யதார்த்த நிலையல்ல. இலங்கையில் தனி ஈழம் கோருகிற அமைப்புகள் பலமும் உண்டு, விடுதலைப்புலிகள் மட்டுமேயல்ல. இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு கணிசமான பகுதியினராக உள்ள இஸ்லாமிய மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பவர்கள் அல்ல இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் அன்றி தெற்கேயும் பிற பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஏகப்பிரதிநிதி நாங்கள் மட்டுமே என்று விடுதலைப்புலிகள் உரிமை பாராட்டுவதும் மற்ற இயக்கங்களுக்கு எதிராகக் கொலைவெறித் தாக்குதலைத் தொடுப்பதும் மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஏற்புடையதல்ல.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை மார்க்சிஸ்ட் கடசி தொடர்ந்து கண்டித்து வந்துள்ளது. பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்குப் பதிலாக இராணுவத் தாக்குதல்கள் மூலம் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க இலங்கை அரசு முற்படுவது சரியான வழிமுறை ஆகாது என்று மார்க்சிஸ்ட் கட்சி தொடர்ந்து கூறி வருகிறது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியமர்த்தும் இலங்கை அரசின் முயற்சிகளை மார்க்சிஸ்ட் கட்சி எதிர்த்து வருகிறது. தமிழர் பகுதிகளுக்குப் பரவலான சுயாட்சி அதிகாரம் என்பதைக்கைவிட்டு மாவட்ட (உள்ளாட்சி அமைப்புகள்) மட்டத்திலேயே அதிகாரப் பகிர்வு என்று இன்றைய ராஜபக்ஷி அரசு முன்வைத்துள்ள யோசனை சிங்கள இனவெறிக்குப் பணிந்து போவதாகுமே தவிர தமிழர் பிரச்சனைக்குத் தீர்வாகாது என்று மார்க்சிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. விடுதலைப்புலிகள் ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப வேண்டும் என்பதே மார்க்சிஸ்ட் கட்சியின் உள்ளார்ந்த விருப்பம்.

### புலிகளின் செயல்பாடு

ஆனால், மார்க்சிஸ்ட் கட்சியை இலங்கைப் பிரச்சினையை மையமாக வைத்து வசைபாடுகிறவர்கள் விடுதலைப்புலிகள் விஷயத்தில் ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்வது தெளிவு. தமிழக மீனவர்கள் இந்திய- இலங்கை கடற்பரப்பில் தாக்குதல்களுக்கு ஆளாகும்போது இலங்கை அரசையும் இராணுவத்தையும் உரத்த குரலில் கண்டிக்கிற இவர்கள் தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் தாக்கிக் கொலை செய்த நிகழ்வையும் மீனவர்களைப் படகோடு கடத்திச் சென்ற சம்பவத்தையும் கண்டு கொள்ள மறுக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் இலங்கைத் தமிழர்களின் இளம்பிள்ளைகளை- பெண்கள் வலுக்கட்டாயமாகத் தங்கள் படைப் பிரிவுகளில் சேர்த்துப் பயன்படுத்துவது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறிய செயல் அல்லவா? விடுதலைப்புலிகளே இதை ஒப்புக்கொண்டு அந்தச் சிறுவர் சிறுமிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவித்து விடுவதாக ஐ.நா குழந்தைகள் நல அமைப்புக்கு உறுதி அளித்த செய்தி வெளிவந்திருக்கிறதே! இதே போல விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றுள்ள கருணா தலைமையிலான அணிக்குத் தமிழ்ச் சிறுவர்- சிறுமிகளைப் பலவந்தமாகப் படைப்பிரிவில் சேர்க்க இலங்கை அரசே உதவும் செயலையும் மார்க்சிஸ்ட் கட்சி கண்டிக்கிறது. ஆனால் மற்றவர்கள் மவுனம் சாதிப்பது ஏன்?

வடகிழக்குப் பகுதிகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் சொந்த மண்ணிலேயே புலம் பெயர்ந்த அகதிகளாக வாடி வதங்குகின்றனர். அவர்களில் ஒரு சிறு பகுதியினர் கடல் வழியே தமிழ்நாட்டில தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் துன்ப துயரங்களுக்கு இலங்கை அரசு எந்த அளவுக்குக் காரணமோ அதே போல விடுதலைப் புலிகளும் காரணம் என்ற உண்மையை மறுக்க முடியுமா? யாழ்ப்பாணத்துக்கு உணவு, மருத்துக்கள் மற்றும் பொருட்களை எடுத்துச் செல்ல கொழும்பு துறைமுகத்தில் சரக்குகள் ஏற்றப்பட்டுக கொண்டிருந்த கப்பலைக் கடற்புலிகள் படகுகளில் சென்று தாக்கியழிக்க முற்பட்ட சம்பவம் எந்த வகையில் மனித நேயச் செயல்பாடு ஆகும்?

இவை அனைத்தையும் இலங்கைத் தமிழர்களின் நீண்டகால நலன்களை மையமாக வைத்து சீர்தூக்கிப் பார்க்கிற எவரும் இராணுவத் தீர்வுக்கு எந்தத் தரப்பு முயற்சி செய்தாலும் அதைக் கண்டிக்க வேண்டும். அரசியல் தீர்வுக்கு பேச்சுவார்த்தை மூலம் விரைவாக முயற்சி மேற்கொள்ள இருதரப்பினரையும் வலியுறுத்த வேண்டும். இதைத்தான் மார்க்சிஸ்ட் கட்சி செய்து வருகிறது. தமிழ்நாட்டின் அரசியல் இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு இந்த முயற்சியைத் தொடர்ந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு நலன் விளைவிப்பதாக அமையும். ●

**வடகிழக்குப் பகுதிகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் சொந்த மண்ணிலேயே புலம் பெயர்ந்த அகதிகளாக வாடிவதங்குகின்றனர். அவர்களில் ஒரு சிறு பகுதியினர் கடல் வழியே தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் துன்ப துயரங்களுக்கு இலங்கை அரசு எந்த அளவுக்குக் காரணமோ அதேபோல விடுதலைப் புலிகளும் காரணம் என்ற உண்மையை மறுக்க முடியுமா? யாழ்ப்பாணத்துக்கு உணவு மருத்துக்கள் மற்றும் குடிமைப் பொருட்களை எடுத்துச் செல்ல கொம்புதுறைமுகத்தில் சரக்குகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த கப்பலைக் கடற்புலிகள் படகுகளில் சென்று தாக்கியழிக்க முற்பட்ட சம்பவம் எந்த வகையில் மனித நேயச் செயல்பாடு ஆகும்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் அறியாத குரூர சித்திரவதை முகாம்கள்

**ஈபிஆர்எல்எவ் உடன் தொடர்புடையவர் என புலிகளால் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்த ஒருவரின் கண்ணீர் கதை**

**புலிகளின் வதைமுகாமிலிருந்து தப்பிய அவர் எழுதி வெளியிட்ட "ஆயுதங்கள் மேல் காதல்கொண்ட மனநோயாளிகள்" என்ற சிறு பிரசுரத்தின் ஒருபகுதி**

1990 இன் ஆரம்பம், இலங்கையின் வடக்கு கிழக்கில் ஒரு அரசியல் மாற்றம் ஏற்படப் போக்கும். அறிகுறிகள் தென்பட தொடங்கியது. காட்டுக்குள் இருந்த கொடிய மிருகங்கள் மெல்ல மெல்ல நாட்டுக்குள் ஊடுருவத் தொடங்கிய காலம் மனித நேயம் மீண்டும் மழுங்கடிக்கப்பட்டது. அடுத்து சில நாட்களில் தமது விழப்போகும் அடிமை விலங்கைபற்றி உணரமுடியாத வட-கிழக்கு மக்களுக்கும் யாழ்ப்பாண பத்திரிக்கைகளும் புலிகளின் வரவை ஒரு வகையில் வரவேற்றனர் இந்நிலையில்தான் மாகாண அரசை ஆதரித்த தமிழ் மக்கள் மீது புலிகளின் பழிவாங்கல் நடவடிக்கைகள் தொடங்கின.

மாற்று இயக்கததினருக்கு தலைவரால் பொது மன்னிப்பு அழிக்கப்பட்டுள்ளதாகவும் தம்மிடம் சரணடையும் படியும் ஒலிபெருக்கிகள் மூலம் தெருத் தெருவாக அறிவிக்கப்பட்டது. எங்கும் பரவலாக பலர் கைது செய்யப்படுவதாக அறியக் கூடியதாக இருந்தது. கைது செய்யப்படுபவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள் என்பதோ அவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பதோ யாருக்குமே தெரியாது. கைது செய்யப்படுபவர்களை பெற்றோர்களோ அல்லது உறவினர்களோ பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை தமிழீழமெங்கும் கொலைகார புலிகளின் கொடிய ஆட்சி ஆரம்பமாகியது.

### புலிகளின் முகாமுக்கு சென்றேன்

1990 ஏப்பிரல் மாதத்தில் ஒரு நாள் புலிகள் வந்து தேடிக்கொண்டு போவதாக வீட்டில சொன்னார்கள் மனம் துணுக்குற்றது. என்னவாக இருக்கும் என சந்தேகித்தபடியே அருகில் அமைந்திருந்த புலிகளின் குகை (முகாம்) நோக்கிச் சென்றேன். முன் காப்பரணில் சீருடையில் இருந்த சிறுவன் ஒருவர் என்னை யாரென விசாரித்தான். நான் மிகமிகப் பணிவாக வந்தகாரணத்தைச் சொன்னேன் உடனே என்னை ஒரு திருடனைப் போல் பார்த்து என் உடல் எல்லாம் தடவிப்பார்த்து சோதித்து திருப்பதிப்பட்டவராக உள்ளே செல்ல அனுமதித்தார். அது ஒரு வழிப்பாதை என்பதும் இந்த வழியால் உள்ளே போனவர்கள் உயிருடன் திரும்புவதில்லை என்பதையும் முன்னர் நான் அறிந்திருந்ததால் மரணபயத்துடனேயே உள்ளே சென்றேன் அங்கே முகாம் பொறுப்பாளர் முன் போய் பயமாக நின்றேன். அவர் எனது பெயர் முகவரி ஆகியவற்றை விசாரித்துவிட்டு "உன்னை அழைக்கும்படி மேலிடத்திலிருந்து எமக்கு உத்தரவு வந்துள்ளது. அவர்கள் வந்துதான் உன்னை விசாரிப்பார்கள். அதுவரை இங்கு இரு எனக் கூறி ஒரு அறையினுள் விட்டுப் பூட்டினர். நேரம் இரவு பத்து மணி அறை ஒரே இருட்டாக இருந்தது சுமார் இரண்டு மணிநேரம் அப்படியே நின்றேன்.

பின்னர் சுவர் ஓரமாக உட்கார்ந்தேன் யோசித்துக்கொண்டேயிருந்து அப்படியே தூங்கிவிட்டேன் மறுநாள் காலை கடன் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டேன் பின் மீண்டும் அறைக்குள் அடைக்கப்பட்டேன். நண்பகல் மதியச் சாப்பாடு தந்தார்கள் சாப்பிடவில்லை சாப்பிடச் சொல்லி ஏசினார்கள் சிறிது சாப்பிட்டேன் இரவு ஒன்பது மணிபோல் பாணும் வாழைப்பழமும் தந்தார்கள் சாப்பிட்டேன் சாப்பாடு கொண்டு வந்த சீருடைச் சிறுவனிடம் "அண்ணே என்னை எப்போ விடுவார்கள்" எனக் கேட்டேன் தெரியாது. எனச் சொல்லி விட்டு கதவைப் பூட்டிக் கொண்டு சென்றுவிட்டார். இரவு முழுவதும் யோசித்துக் கொண்டிருந்தேன் பொழுது புலர்ந்தது. கதவு திறந்தது. காலைக் கடனை முடிப்பதற்கு அனுமதித்தார்கள்.

அந்த நேரத்தில் முகாம் பொறுப்பாளரைக் கண்டேன் என்னை எப்போ விடுவீர்கள்? என அழுது கொண்டே கேட்டேன் "தலைமைக் காரியாலயத்திலிருந்து இன்று இரவு ஆட்கள் வந்த உன்னை விசாரித்து பிரச்சினை இல்லை என்றால் உடன் விடுதலை செய்வார்கள்" என்றார். மனதுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. அன்றும வழமைபோல் மதிய உணவும் இரவு உணவும் தரப்பட்டது. இரவு விசாரணைக்கு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் தூக்கம் வராமல் விழித்திருந்தேன்.

### விசாரணை ஆரம்பம்

நடுச்சாமம் பன்னிரண்டு மணியிருக்கும் கதவு திறக்கப்பட்டு அறைக்கு வெளியே அழைக்கப் பட்டேன் கறுத்த தடித்த புலி ஒருவர் நின்றார் எனது பெயர ஊர் எல்லாம் விசாரித்தார் E.P.R.L.F உடன் என்ன தொடர்பு எனக் கேட்டார். தொடர்பு எதுவுமே இல்லை என மறுத்தேன் மீண்டும், மீண்டும் அதையே கேட்டார். நான் இல்லை இல்லை என மறுத்தேன் "டேய் சுத்துறியா? (என்னை மடையனாக்கிறியா) எனக் கேட்டு அடிக்க வந்தார்.

"அண்ணே அடிக்காதீர்கள் எனக்கு இயங்கங்களுடன் தொடர்புகள் இல்லை எனக்கு குடும்பப் பொறுப்பு அதிகம் எனச் சொல்லி அழுதேன் "டேய்" (கெட்டவார்த்தை) எல்லாரும் இப்படித் தானடா சுத்துறீங்கள் நீ E.P.R.L.F க்கு றெக்கி (உளவு சொன்னது) கொடுத்து வந்தது எமக்கு தெரியும். பொய் சொல்லாதே" என கூறினார். பின்னர் அங்கு நின்ற வேறு புலியைக் கூப்பிட்டு "இவனின் சேட்டைக் கழற்றி கண்ணைக் கட்டு" என்றார் அவ்விதமே செய்யப்பட்டேன் கைக்கு விலங்கிடப்பட்டேன் சிறிது நேரம் புலிகள் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள் என்னை இழுத்துக் சென்று ஒரு வாகனத்தில் ஏற்றினார்கள் வாகனம் எங்கு செல்கிறது என்பது தெரியாமல் வாகனத்தின் அடியில் குப்புற படுக்கவைக்கப்பட்டிருந்த நான் ஏதேதோ பயங்கர கற்பனையில் பயணப்பட்டுக் கொண்டிருந்தேன். இடைவழியில் வாகனம் நிறுத்தப்பட்டது. என்னை அழைத்து சென்றவர் வேறு யாருடனோ கதைப்பது கேட்டது, "யார் வானுக்குள்ள நல்ல கிடாய்" எனப் புதிய குரல் கேட்க" இதனைச் சுடலையில தட்டப் போகிறேன் என என்னை அழைத்துச் சென்றவர் சொன்னது கேட்டது.

எனக்கு மரண பயம் பிடித்துக் கொண்டது. தட்டப்போகிறேன் எனறால் அவர்கள் பாஷையில் சுடப்போகிறேன் என்று அர்த்தம். எனக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. சிறிது நேரத்தில் ஒன்றுமே தெரியாத நிலைக்கு நான் வந்துவிட்டேன் வாகனம் எவ்வளவு நேரம் ஓடியது என்பதோ, எங்கு போகிறதென்பதோ எனக்கு எதுவும் தெரியவில்லை. வாகனத்தில் இருந்து இழுத்து இறக்கப்படும் போதுதான் சுய உணர்வு வந்தது.

**கொலைகாரப் புலிகளினால் அநியாயமாக கைது செய்யப்பட்டு, துணுக்காய் காட்டில் சித்திரவதை அனுபவித்துக் கொண்டிருந்தபோது, புலிகளின் இக் கொடுமைகளை உலகத்திற்கு குறிப்பாக அவர்களை உத்தமர்களாக, விடுதலை வீரர்களாகக் கருதும் அப்பாவித் தமிழர்களுக்கு அறியத்தரவேண்டும் என பல தடவைகள் எண்ணினேன் இதை என் கடமையாகவும் கருதினேன். புலிகளின் கொடுஞ் சிறையிலிருந்து தப்பி வந்த பின்னர் யாழ் நகரில் தலைமறைவாக இருந்தேன். புலிகளின் கண்ணுக்குள் மண்ணைத்தூவி விட்டு தமிழீழத்திலிருந்து தப்பி கொழும்பு வந்து சேர்ந்தேன் என் உடலில் ஏற்பட்ட காய வடுக்கள் மறைந்து போனாலும் போகலாம். ஆனால் இக்கொடிய புலிகளினால் என் நெஞ்சில் ஏற்பட்ட காயம் என்றுமே ஆறாது. ஆனால் காயம் பட்ட என்நெஞ்சுக்கு ஆறுதலாகவும், மனித நேயம் பேணப்பட நான் செய்யும் சிறு பணியாகவும் கண்ணீருடன் இதை எழுதுகிறேன்.**

### கைதிகளோடு கைதியாக

நான் இப்போது ஒரு கும்மிருட்டான இடத்தில் நின்றிருந்தேன். அடர்த்தியான சோலை போன்ற உயர்ந்து வளர்ந்த மரங்கள். இருபத்தைந்து யார் தொலைவில் ஒரு பெரிய மாடி வீடு இருந்தது அங்கு அழைத்துச் செல்லப்பட்டேன் அது ஒரு முகாம் என்பதை அறியக் கூடியதாக இருந்தது. அங்கிருந்த புலிகள் தூக்கக் கலக்கத்துடன் இருந்தார்கள். என்னை அழைத்து வந்தவர் அங்கிருந்த முகாம் பொறுப்பாளர் நசீர் என்பவரிடம் என்னை ஒப்படைத்தார் இருபடிவங்களை நசீரிடம கொடுத்து "பிரச்சினை இல்லை அடிக்க வேண்டாம்" என மெதுவாக கூறியது என் காதில் விழுந்தது. இது எனக்கு மன ஆறுதலைக் கொடுத்தது.

மேல் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஓர் அறைக்குள் தள்ளி விடப்பட்டேன் லைட் எரிந்து கொண்டிருந்தது. அறைக்குள் சுமார் இருபது பேர் வரை இருந்தார்கள். எல்லோரும் மிரண்டு போய் இருந்தார்கள் யாருமே எதுவுமே கதைக்கவில்லை நான் ஓர் ஓரமாக உட்கார்ந்தேன் ஓரிருவர் படுத்திருந்தார்கள் மற்றவர்களுக்கு படுக்க இடமில்லை நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது பக்கதிலிருந்த கைதியிடம் பேச்சு கொடுக்கலாமென்றால் அவன் தூங்கி வழிந்து கொண்டிருந்தான் எங்கோ தொலைவில் கோவில் மணி ஓசை கேட்டது. எனது பக்கத்துக் கைதி தூக்கம் கலைந்து எழுந்தார். "அண்ணே எப்போது எம்மை விடுவார்களாம்" என கேட்டேன் அவர் கதைக்க வேண்டாம் எனவும் சைகை செய்து காட்டினார் நான் மௌனமானேன்.

### நான்காவது நாள்

கைது செய்யப்பட்ட நாலாவது நாள் பொழுது புலர்ந்தது. காலை ஒன்பது மணிபோல் நான் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறை திறக்கப் பட்டு வெளியே எல்லோரும் அழைக்கப்பட்டோம் முகம் கழுவுவதற்கும், சிறுநீர் கழிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டோம் எம்மை சூழ பல புலிகள் துப்பாக்கிகளுடன் காவல் நின்றார்கள் இப்போதும கைவிலங்கு அகற்றப்படவில்லை அங்கிருந்த எல்லா கைதிகளும் கைவிலங்கு போடப்பட்டிருந்தது. முகாமின் முன் முற்றத்தில் வரிசையாக நிறுத்தப்பட்டோம் அங்கு எல்லாமாக நாற்பது கைதிகள் இருந்தார்கள். எல்லோரும் முதல் நாள் இரவு அங்கு கொண்டுவரப்பட்டவர்கள் தான் நசீர் என்ற புலிகளின் முகாம் பொறுப்பாளர் வந்து ஒரு மேசையின் முன் அமர்ந்து கைதிகளை ஒவ்வொருவராக அழைத்து விசாரிக்கத் தொடங்கினார்.

### விலங்குகளோடு விலங்குகளாக

எனது முறைவந்தது. எனது பெயர் முகவரி தொழில் எல்லாம் கேட்டார் "டேய் உன்னை எதற்காக பிடித்தார்கள்" என கேட்டார் தெரியாது என்றேன். நீ சும்மா இருந்தா ஏனடா பிடிக்கிறார்கள் என்ன செய்தனி E.P.R.L.F ஆதரவாளனா எனக் கேட்டார். நான் ஒரு இயக்கத்துக்கும் ஆதரவாளனல்ல என்றேன் உடனே அவர் நீ எல்லாம் ஏனடா தமிழனாய் பிறந்தாய் என கூறி பெரிய ரீப்பை சட்டத்தால் அடித்தார் "நீ சுத்துகிறாய் (பொய் சொல்கிறாய்) புலிப்படையை சாதாரணமாகவா நினைக்கிறாய் நீ சும்மா இருக்க உன்னை பிடிப்பதற்கு புலிப்படை ஒன்றும் முட்டாள்களல்ல எனக் கூறி மீண்டும் அடித்து முன்னைய அறையில் அடைத்தார்.

அன்று பகல் முழுவதும் ஒரு நேர சாப்பாடு மட்டுமே தரப்பட்டது இரவு சுமார் முப்பது கைதிகளைத் தெரிவு செய்து இவ்விரண்டு பேராக இணைத்து விலங்கிட்டார்கள். கண்கள் கட்டப் பட்டது. நான் முதல் முதல் முகாமுக்குப் போகும போது அணிந்திருந்த நீட்டுக் காற்சட்டையுடன் மட்டுமே நின்றேன். எனது சேட் எங்கென்றே தெரியவில்லை. எம்மைப் பிடித்து இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றினார்கள் வாகனம் புறப்பட்டது. சிறிய வாகனம் ஒன்றில் முப்பது கைதிகளும் ஏற்றபட்டிருந்தோம் மிருகங்களைக கூட அப்படி அடைத்துக் கொண்டு செல்ல முடியாது நாம் மிருகங்களிலும் கேவலமாக புலிப் படைக் கொடியவர்களினால் அழைத்துச் செல்லப பட்டோம்.

### புதிய வதை முகாம்

சுமார் நாற்பதைந்து நிமிடம் வாகனம் ஓடிய நின்றதும் எல்லோரும் இறக்கப்பட்டோம். கண் கட்டப்பட்டிருந்தாலும் இருவரிருவராக விலங்கிடப்பட்டிருந்ததாலும் ஒழுங்காக இறங்கமுடியவில்லை அவர்கள் கூட்டிச் சென்ற பாதையால் நடக்கவும் முடியவில்லை நான் இரு தடவை விழுந்தேன் கண கட்டுக்களை கழற்றி விட்டார்கள் ஒரு பழைய காலத்து பெரிய வீட்டின் பின்பக்கத்தில் நின்றோம். நிலத்தில் தலை குனித்தபடி இருக்கும்படி பணிக்கப்பட்டோம் நசீர் தலைமையிலேயே நாம் இந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தோம் சாள்ஸ் என்ற முகாம் பொறுப்பாளர் அங்கு நின்றார். அவர் உதவியாளர் டிஸ்கோ என்பவரும் உடனிருந்தார். சுமார் இருபதைந்து புலிகள் ஆயுதபாணிகளாக நின்றார்கள். கைதிகள் ஒவ்வொருவரினதும் தனித்தனி குற்றப்பத்திரங்கள் பொறுப்பாளர் சாள்ஸ்சிடம் ஒப்படைக்கப்பட்டது. எம்மை ஒவ்வொருவராக அழைத்து குற்றப்பததிரத்திலுள்ளவற்றை படித்து ஏளனமாகப் பார்த்து தூஷண வார்த்தைகளால் திட்டினார்கள் இப்படியாக ஒவ்வொருவராக அழைத்து விசாரித்து கேலி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது பொழுது விடிந்து விட்டது.

விடிந்ததும் நாம் இருக்கும் இடத்தின் சூழல் தெரியத் தொடங்கியது. சுமார் மூன்று ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் பழைய காலத்து மாடிவீடு ஒன்று இருந்தது. காணியின் பின் கோடியில் ஒரு பெரிய ஓலைக் கொட்டிலும் மத்திமப் பகுதியில் ஒரு சிறு ஓலைக் கொட்டிலும காணப்பட்டது. எங்கோ பாடசாலை ஒன்றிலிருந்து எடுத்து வரப்பட்ட மேசைகளும் கதிரைகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன. காணியின் ஒரு கோடியில் மலம் கழிப்பதற்கு பாரிய கிடங்குகள் வெட்டப்பட்டு அவற்றின் மேல் தென்னங்குற்றிகள் போடப்பட்டிருந்தன. ஒரு பெரிய பாழடைந்த கிணறும் இருந்தது.

### சிறை வாழ்கை ஆரம்பம்

இப்புதிய சூழலில் எனது சிறை வாழ்க்கை ஆரம்பமாகியது அங்கு சுமார் ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கைதிகள் ஒருவரோடு ஒருவர் கதைக்கக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு இருந்தது. அப்படி இருந்தும் எம்மை கண்காணிக்கும் புலிகள் கவனிக்காத நேரத்தில் எமது கவலைகளை பரிமாறிக் கொள்வோம் நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் முன்னாள் சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினா நவரத்தினத்தின் சாவகச்சேரியில் உள்ள வீடு என்பது பின்னர் தெரிய வந்தது. அவ்வீட்டைச் சுற்றி நூற்றுக்கு மேற்பட்ட புலிகள் ஆயுதபாணிகளாக இரவு பகல் காவலிலீடுபடுத்தப் பட்டிருந்தனர். இங்கு எமது விலங்குகள் அகற்றப்பட்டன.

சாவகச்சேரி சாள்ஸ் முகாமுக்கு வந்த அடுத்த நாள் என்னிடம் இருந்த உடமைகள் எல்லாம் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டன. நான் கைது செய்யப்படும் போது என்னிடம் 1 பவுண் மோதிரம் ஒன்றும் பணமாக ரூபா எண்ணாயிரத்து முன்னூறும் இருந்தது. அத்துடன் எனது தேசிய அடையாள அடடையும் இருந்தது. இவை எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன.

இம்முகாமில் இருந்த சுமார் ஆயிரம் கைதிகளில் பலருக்கு பொக்கிளிப்பான் நோய் கண்டிருந்தது. அவர்களை முகாமின் பின் கோடியில் அமைந்திருந்த ஓலைக் கொட்டிலில் காவல் வைப்பார்கள் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாத காரணத்தால் பலருக்கு வாந்தி பேதி நோய் ஏற்பட்டது. அவர்களுக்கு எவ்வித வைத்தியமும் இல்லை மலசலம் கழிப்பதற்கு போதிய இடவசதி இல்லாததுடன் தண்ணி வசதியும் இல்லாததால் கைகளுக்கு சொறி, சிரங்கு, வாந்தி, பேதி என்பன இலகுவில் பரவ ஆரம்பித்தது. கைதிகள் நோயினால் பெரிதும் துன்புற்றார்கள்.

காலையில் முகம் கழுவ அனுமதிப்பார்கள் அதே நேரத்தில் மலமும் கழித்து முடித்துவிட வேண்டும். காலை ஆறு மணி முதல் ஏழு மணிக்கிடையில் எல்லா கைதிகளும் இந்த வேலையை முடித்துவிடவேண்டும். சுமார் ஆயிரம் கைதிகள் காலைக்கடன் முடிப்பதற்கு போதிய வசதி இல்லா நிலையில் 1 மணி நேரத்தில் இது எப்படி சாத்தியமாகும் செய்ய முடியாதவர்கள அடுத்த நாள் தான் செய்யவேண்டும்.

காலை எட்டுமணிக்கு தேனீர் தருவார்கள். கைதிகள் சிலர்தான் சமையில் செய்வார்கள் காலை பத்து மணிபோல கௌபி சாப்பிடத் தருவார்கள் பின் மதியச்சாப்பாட்டுக்கும் இரவுச் சாப்பாட்டுக்கும் பதிலாக மாலை நாலு அல்லது ஐந்து மணி போல் சோறும் பருப்பு கறியும் தருவார்கள். கைதிகள் சாப்பிடுவதற்காக வாங்கும சோறும் சிறிது கொட்டக் கூடாது அப்படி யாராவது குப்பையில் கொட்டியது கண்டுபிடிக்கப்பட்டால் கொட்டியவர் உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும் அப்படி ஒத்துக் கொண்டால் அவருக்கு மூன்று நாள் சாப்பாடு இல்லை. ஒருவரும் ஒத்துக் கொள்ள வில்லையாயின் மறுநாள் ஒருவருக்கும் சாப்பாடு இருக்காது.

தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் தந்த தலைவன்

காலம் தந்த தலைவனை
காலன் வென்ற கதை சொல்லி
கண்ணீர்விட வரவில்லை
உயிர்கள் மேல் தன் உயிர்வைத்து
உன்னதனாய் வாழ்ந்த மனிதனை
நினைவுகூர வந்திருக்கிறேன்.

பத்மநாபா
உயர்ந்த உருவம்
அடர்ந்த தாடி
ஒளி வீசும் கண்கள் ·
அமைதி படர்ந்த முகம்
இவை அவர் புறத்தழகு.
அன்பு கொண்ட குணம்
மென்மையான மனம்
உண்மை பேசும் திறன்
இவை அவர் அகத்தழகு.

படிக்கும் காலத்தில்
இளமைத் துள்ளலில்
இதயம் சிறகடிப்பது இயற்கை
இவருக்கோ இதயம் துடிதுடித்தது
பாமர மக்களின் அவலம் கண்டு.
மாடாய் உழைத்தும்
மறு வேளை உத்தரவாதமின்றி
வாழும் மனிதரின் சோகம்
தந்தது இவர் தோளில் பாரம்
மாற்றம் காண வழி தேடி
மனம் அலை பாய்ந்த வேளை
இவர் கண்டு கொண்ட மார்க்கம்
மாக்சிசம்.

இனம் மொழி கடந்து
இருளில் வாழும் மக்களின்
விடுதலைதான் இவர் நோக்கம்
ஆயினும் பேரினவாதத்தின்
பெரும் இன அழிப்பால்
இன விடுதலை முதன்மையென
மாறியது இவர் பயணம்.
தமிழ் மக்களின் இன விடுதலை
முன்னும்
உழைக்கும் மக்களின்
பொருளாதார விடுதலை பின்னும்
என்னும் இலட்சியத்தில்
நடைபோட்ட தலைவனை
சிறு இனவாதம் குதறிப் போட்டதில்
ஒரு லெனினை, ஒரு சேகுவேராவை,
ஒரு கோசிமினை ஒரு நெல்சன்
மண்டேலாவை
இழந்து போனது எங்கள் தேசம்.

மக்களை நேசிக்காத
எந்தப் போராட்டமும்
மடிந்து போகும் என்பது வரலாறு.
மண்ணுக்காக அல்ல
மக்களுக்காகவே மண்ணை
நேசிக்கிறேன்
என்று சொன்ன
இந்த மாபெரும் மனிதநேயவாதியை
கொன்று போட்டதில்
புதைந்து போனது
மக்களின் விடுதலை.

இன்று மனித நேயத்தின்
குரல்வளை நெரிக்கப் பட்டு
குற்றுயிராய்
ஆங்காங்கே சில மூலைகளிலிருந்து
முனகிக் கொண்டிருக்கிறது.
எங்கள் நாட்டுச் சூரிய உதயம்
பல உயிர்களைக் காவு கொண்ட
செய்திகளோடேயே தொடங்குகிறது.

இப்போதுதான்
உன்னை இழந்ததன் தாக்கம்
இன்னும் இன்னும் அதிகரிக்கிறது.
நீ கனவு கண்ட
அழகான பூங்கா போன்ற ஈழம்
இங்கே சுடுகாடாகிக்
கொண்டிருக்கிறது.
எனினும்
உன்னால் விதைக்கப்பட்ட
நம்பிக்கைகள் ஆங்காங்கே
முளைவிடத் தவறவில்லை.
மாற்றம் மட்டுமே மாறாத ஒன்றென்று
மாக்சிசம் சொல்வதாய் சொன்னாயே!
அப்படி ஒரு நாள் வரும்போது
உன் மகோன்னதம்
மக்களுக்குப் புரிந்திருக்கும்.

**தோழர் ஸ்டான்லி**



# வாழ்வின் எழிலார்ந்த கனவுகளை கொண்டிருந்ததற்காக கொல்லப்பட்டவர்கள்



யோகசங்கரி
முன்னாள் பா.உ
ஈ.பி.ஆர்.எல்எ.வ்

கிருபாகரன்
முன்னாள் நிதியமைச்சர்
வடகிழக்கு மாகாணசபை

பத்திமநாயகம் (ஐயா)
மத்தியகுழு ஈபிஆர்எல்எவ்

பஞ்சலிங்கம்
மனோ மாஸ்டர் -ரெலோ

அமிர்தலிங்கம்
செயலதிபர் த.வி.கூ
முன். எதிர்க்கட்சி தலைவர்

பத்மநாபா
செயலாளர் நாயகம்
ஈ.பி.ஆர்.எல்.எவ்



பாலநடராசா ஐயர்
பத்திரிகையாளர்,
அரசியல் செயற்பாட்டாளர்

ஆனந்தராசா
அதிபர்
சென்.ஜோன்ஸ் கல்லூரி

மனோ மாஸ்டர்
ஈ.என்.டிஎல்.எவ்

கே.எஸ்.ராஜா
ஊடகவியலாளர்

கேதீஸ்வரன்
உதவி பணிப்பாளர்
அரச சமாதான செயலகம்
அரசியல் செயற்பாட்டாளர்

சுபத்திரன் (றொபேட்)
மத்தியகுழு
ஈ.பி.ஆர்.எல்.எவ்



மாணிக்கதாசன்
இராணுவப்பிரிவு தலைவர்
புளொட்

பொன் மதிமுகராஜா
எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர்
யாழ் அமைப்பாள் த.வி.கூ

நமசிவாயம்
வர்த்தகர்,
த.வி.கூ முக்கியஸ்தர்

நிலன் திருச்செல்வம்
அரசியல சட்ட நிபுணர்

பஞ்சலிங்கம்
யாழ் அரசாங்க அதிபர்

இருதயராஜன்
யாழ் மாவட்ட அமைப்பாளர்
புளொட்



ராஜன் சத்தியமூர்த்தி
முன்னாள் பா.உ

ராஜதுரை
அதிபர் மத்திய கல்லூரி

ரஜனி திரணகம
விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

ஜெகநாதன் (அமீன்)
ஈ.பி.ஆர்.எல்.எவ்

றேகன்
ஈ.பி.ஆர்.எல்.எவ்

அற்புதராஜா (ரமேஸ்)
ஆசிரியர் 'தினமுரசு'
முன்னாள் பா.உ., ஈபிடிபி



கணேசபிள்ளை
பிரபல கலைஞர்


கணேசமூர்த்தி (ராசீக்)
முன்னாள் ஈபிஆர்எல்எவ்
மத்தியகுழு உறுப்பினர்

சாம் தம்பிமுத்து
முன்னாள் பா.உ
ஈ.பி.ஆர்.எல்.எவ்

யோ. சறோஜினி
யாழ். மாநகர முதல்வர்
தமிழர் விடுதலைக் கூட்டணி

செழியன் பேரின்பநாயகம்
மட்டு. மாநகர முதல்வர்
ஊடகவியலாளர்

செல்லக்கிளி மாஸ்டர்
பருத்தித்துறை நகர முதல்வர்
புளொட்



செல்வி
பல்கலைக்கழக மாணவி

சிவபாலன்
யாழ். மாநகர முதல்வர்
தமிழர் விடுதலை கூட்டணி

ஸ்ரீசபாரட்ணம்
ரெலோ தலைவர்

சுந்தரம்
புதியபாதை ஆசிரியர்
புளொட்

வல்லிசுந்தரம்
ஈ.பி.ஆர்.எல்.எவ்

சூரியமூர்த்தி
முன்னாள் நகர முதல்வர்



தங்கத்துரை
முன்னாள் பா.உ
தமிழர் விடுதலை கூட்டணி

உமா மகேஸ்வரன்
[illegible]

வசந்தன்
முன்னாள் பா.உ
புளொட்

விஜிதரன்
பல்கலைக்கழக மாணவன்

விமலேஸ்வரன்
பல்கலைக் கழக மாணவன்

யோகேஸ்வரன்
முன்னாள் பா.உ
தமிழர் விடுதலை கூட்டணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# “இறுதி யுத்தத்திற்கு” நிதியுதவி செய்தல்

**புலம்பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும் தொடர்பாக 2005 அக்டோபர் தொடக்கம் 2006 பெப்ரவரி வரை கனடா, இங்கிலாந்து, ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறார்கள் உரிமைகள் பிரிவின் நியாயப் பிரச்சாரப் பணிப்பாளர் ஜோ. பேக்கர் அவர்களால் எழுதப்பட்டு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் பல்வேறு பிரிவுகளின் பணிப்பாளர்களாலும் பரிசீலிக் கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை இங்கு தொடராகப் பிரசுரிக்கப்படுகின்றது.**

### நிதி திரட்டுதலும் பலாத்கார பணப்பறிப்பும்

புலிகள் இயக்கமானது வெறுமனே தீவிரமானதொரு நிதி சேகரிப்பு உபாயங்களில் மட்டுமே ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு தனிநபரும், அவனோ, அவளோ தாங்கள் நிதி வழங்கப் போகிறோமா இல்லையா என்பதை அவர்களே சுதந்திரமாக முடிவெடுக்கலாம், என்பதே சிலரின் வாதமாகும். ஆனால், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சேகரித்த சாட்சியங்கள் மற்றும் தகவல்களின்படி நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக புலிகள் இயக்கத்தினர் பல்வேறு சம்பவங்களில் மேற்கொண்டுள்ள அழுத்தங்களின்படி அது பலாத்கார பணப்பறிப்பு என்ற அர்த்தத்தையே தருகிறது. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் நேர்காணல் செய்யப்பட்ட பலர், தாம் நிதி கொடுக்கமாட்டோம் என மறுத்த பொழுது நேரடியாகவே அச்சுறுத்தப்பட்டுள்ளனர். ஏனையவர்கள், இங்கே நிதி பங்களிப்புச் செய்யாவிட்டால் ஒன்றில் இலங்கையில் தங்கள் குடும்ப அங்கத்தவர்களைப் பார்க்கப் போவதற்கு முடியாமல் போகும். அல்லது வெளியிலே சொல்ல முடியாத வகையில் “பிரச்சினைகளுக்கு” முகம்கொடுக்க வேண்டிவரும் என கூறப்பட்டுள்ளனர். இத்துடன் புலிகள் இயக்க அல்லது உலகத் தமிழர் இயக்க பிரதிநிதிகள், அச்சுறுத்தி பணியவைக்கும் பாணியிலான நடத்தைகளிலும் ஈடுபடுகின்றனர். உதாரணமாக மேலே குறிப்பிட்ட அந்த குடும்பத்தினரிடம் அவர்கள் நிதி வழங்க மறுப்பதற்கு காரணமாக அவர்கள் புலிகள் இயக்கத்தின் போராட்டத்தை தாங்கள் ஆதரிக்கவில்லை என்று கூறுகின்ற அறிக்கை ஒன்றை எழுதி, அதில் கையொப்பமிட்டுத் தரும்படி அவர்களை வற்புறுத்திய சம்பவத்தை கூறலாம்.

அத்துடன் மேலே விபரித்தபடி இலங்கையில் நடத்தப்படுகின்ற அரசியல் கொலைகள் மற்றும் மேற்கு நாடுகளில் பத்திரிகையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்முறை ரீதியான தாக்குதல்கள் மற்றும் சேறடிப்பு பிரச்சாரங்கள என்பவற்றினால், தமிழ் சமூகத்தினரிடையே உருவாகியிருக்கும்




பீதிக் கலாச்சாரம் ஆனது, புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகளுக்கு எவ்வித ஆட்சேபனையும், எதிர்ப்பும் இன்றி அவர்களை இணங்கிப்போக வைக்கின்றது. நேரடியான அச்சுறுத்தலுக்கான அவசியம் அருகி இருப்பதற்கான காரணி யாதெனில் மேற்சொன்ன சம்பவங்கள் சமூகத்திற்கு நன்கு தெரியும் என்பதும் இச் சம்பவங்களின் வடிவமைப்பு மக்களை ஒரு பயச் சூழலில் ஆழ்த்தியிருப்பதுமாகும். டொரன்டோவில் உள்ள ஒரு செயற்பாட்டாளர் மனித உரிமைகள் கணிகாணிப்பு அமைப்பிடம் கூறுகின்றபொழுது வெளிநாடுகளில் நேரடியான வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி நிகழாவிட்டாலும்.

*புலிகள் இயக்கம் அடிக்கடி வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடாமல் இருந்தாலும் ஏற்கனவே நிகழ்ந்துள்ள ஒரு சில சம்பவங்கள் அதற்கான தேவையைப் பூர்த்தி செய்கின்றன. புலிகள் இயக்கத்தினால் நிகழக்கூடிய வன்முறைகள் மற்றும் தீங்குகள் என்பவற்றுக்கு அவர்களது எச்சரிக்கையும் சமிக்ஞையும் போதுமானது. மேலோட்டமாக பார்க்கின்ற பொழுது சுமுகமாகத் தோன்றினாலும், அச்சம்பவங்களின் தாக்கமானது மிகவும் கணிசமானதாகும். புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களோ தாங்கள் எப்பொழுதும் வெளிப்படையாக அச்சுறுத்தல் மற்றும் நெருக்குவாரமளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று கூறுகின்றனர். ஆனால், புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அவ்வாறு வெளிப்படையாக செய்ய வேண்டிய தேவை இல்லை. ஏனெனில், அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதும், எதையும் செய்யக்கூடியவர்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும்.*

### உலகத் தமிழர் இயக்கத்தின் பதில்கள்

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் பேசிய, கனடா, உலகத் தமிழர் இயக்க தலைவர் சித்தர் சிற்றம்பலம், உலகத்தமிழர் இயக்கமானது கனடாவில் வாழ்கின்ற தமிழர்களின் நலன்களுக்காகப் பாடுபடுகின்ற அதேவேளை அங்கு நாட்டிலே நடக்கின்ற விடுதலைப் போராட்டம் மற்றும் உரிமைகள் நசுக்கப்படுதல் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் அக்கறைப் படுகின்றது என்று கூறினார்.

தொடரும்.......

# காந்தி வாழ்க்கைச் சித்திரம்

## பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து




அட்டோர்னி எம்.கே. காந்தி தனது சக ஊழியர்களுடன் ஜோஹன்ஸ்பர்க்

**“காந்தி வாழ்க்கைச் சித்திரம்” நூல் பி.ஆர். நந்தா எழுதி என்.ஜே. ராஜாமணியினால் தமிழாக்கம் செய்யப்பட்டு, இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தால் வெளியிடபபட்டுள்ளது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை படம் பிடித்துக்காட்டும் இந் நூல், கண்ணோட்டத்தில் தொடராக பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.**

அது இதுவரை காத்திருந்த சந்தர்ப்பத்தை அரசாங்கம் கெட்டியாகப் பற்றிக்கொண்டது. மார்ச் 10, 1922 மாலையில் தனது ஆச்சிரமத்தில், காந்தி கைது செய்யப்பட்டார். அகமதாபாத் மாவட்ட அமர்வு நீதிபதி ட்ரும்.ஃபீல்ட் முன்னிலையில் அவரது விசாரணை நடைபெற்றது. ஆங்கிலேய நீதிபதி, இருக்கையில் அமர்வதற்கு முன்பாக கூண்டில் நிற்கும் குற்றவாளிக்கு தன் தலை அசைத்து வணக்கம் தெரிவித்து மிகவும் மரியாதையுடன் நடந்துகொண்டார். தான் விசாரித்த அல்லது இனி விசாரிக்க போகிற எந்த நபரையும் விட காந்தி ஒரு வேறுபட்ட ரகத்தைச் சேர்ந்தவர் என அவர் ஒப்புக்கொண்டார். தான் குற்றவாளி என அவருக்கு ஆறு வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

விசாரணை நடந்த 100 நிமிடமும். காந்தி அமைதியாக மட்டுமின்றி “விழாக்காலத்துக் குரிய சந்தோஷ”த்துடன் காணப்பட்டார். என பார்வையாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். அவர் நீதிபதியிடம் கூறினார். “இந்த தண்டனையை பொருத்தவரை எந்த நீதிபதியும் எனக்குத் கொடுக்க இலகுவானதொன்று என்று நான் நிச்சயம் கருதுகிறேன் இந்த விசாரணைகள் அனைத்தையும் பொறுத்தவரை நான் இதை விட மேலான பணிவை எதிர்பார்த்திருக்க முடியாது என்று நான் சொல்லத்தான் வேண்டும்.”

அவர் பூனாவிலுள்ள எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். சிறந்த வெளியில் படுக்க அவர் அனுமதிக்கப்படவில்லை. அவருக்கு ஒரு தலையணை கூட மறுக்கப்பட்டது. புத்தகங்களையும் இதர துணிகளையும் வைத்து தலையணைபோல் பண்ணிக் கொண்டார். இந்த சிறை வாசத்தின் போது பல்வேறு 150 புத்தகங்களில் ஹென்றி ஜேம்ஸின் “பலதரப்பட்ட மத அனுபவம்” [illegible] “மனிதனும் மாமனிதனும்” பக்கிளின் “நாகரிகத்தின் வரலாறு”, “வெல்ஸின் வரலாற்று சுருக்கம்” கோதேயின் “போஸ்ட்”, கிப்ளிங்கின் “பாசறைப் பாடல்கள்” ஆகியவை அடங்கும் காலையிலும், மாலையிலும் பிரார்த்தனைகள் நூல் நூற்பது போன்ற அன்றாட வழக்கங்களை அவர் கடைபிடித்துவந்தார். மற்ற நடவடிக்கைகளின் போது ஒதுக்கப்பட்ட இலக்கிய மதச் சம்பந்தப்பட்ட படிப்புக்கள் திரும்பவும் தொடங்கின. எப்போதாவது நிகழ்த குத்திக்காட்டல்கள் தவிர காந்திக்கு சிறை வாழ்வு, தாகூர் கூறியது போல் கைது சிகிச்சையாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

காந்தி சிறையில் அடைக்கப்பட்ட சற்று காலத்திற்கெல்லாம் அவரைப் பின்பற்றியவர்களிடையே தீவிரமான பிளவுக்கான அறிகுறிகள் தோன்றின. மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ் போன்ற சில முக்கிய காங்கிரஸ்வாதிகள் சட்டசபை புறக்கணிப்பை அகற்றுவதற்கு ஆதரவு தருவதாக அறிவித்தனர். அவர்கள் மாகாண மத்திய சட்டசபை தேர்தல்களில் போட்டியிட்டு, சண்டையை விரோதி முகாமிற்கு கொண்டு செல்ல” வென ஸ்வாஜ் கட்சியை அமைத்தனர். முதலில் இருந்த ஒத்துழையாமை திட்டத்தில் எந்த மாற்றமும் செய்வதை எதிர்த்த வல்லப்பாய் படேல், ராஜகோபாலாசாரி போன்றவர்கள். “மாற்றங்களை விரும்பாதவர்கள்”, என அழைக்கப்பட்டனர்.

1923 முழுவதும் காங்கிரஸ் அரசியல் நிலையில்லாமல் அலைபாய்ந்து கொண்டிருந்தது. செயற் குழு, அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றிலிருந்து நிறைய பேர் ராஜினாமா செய்தார்கள் நாணயம் கேள்விக்குள்ளானது. ஒழுங்கு முறை அம்சங்கள் எழுப்பப்பட்டன. காங்கிரஸின் அடிப்படை அமைப்பு அலசி சூராடப்பட்டது.

செப்டம்பர் 1923ல் நடந்த காங்கிரஸ் சிறப்புக் கூட்டத்தில், நவம்பரில் நடக்கவிருந்த தேர்தல்களில் ஸ்வராஜ் கட்சியினர் தங்களது வேட்பாளர்களை நிறுத்த அனுமதிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. ஸ்வராஜ் கட்சியினருக்கு தேர்தலில் போட்டியிட இரண்டு மாதங்களே கிடைத்த. ஆனால் மத்திய சட்டப்பேரவையில் ஒரு பெரும் பகுதியை பிடித்தும் மாகாண சட்டசபையில் பிரதிநிதித்துவமும் கணிசமான மத்திய மாகாண சட்டசபையிலும் கூட பெறும்பான்மை கிடைத்தும், அவர்கள் வெற்றிவாகை சூடினர். மத்தியப் பேரவையில் மோதிலால் நேரு கட்சிக்கு தலைமை வகித்தார். பெங்கால் சட்டசபையில் சி.ஆர். தலைமையேற்றார்.

தொடரும்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிச் வீர மக்கள் தின நிகழ்வுகள்

தேசவிடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த எம் போராளிகள் மற்றும் தமிழ் மக்களை நினைவு கூரும் 18வது வீரமக்கள் தினம் 07.07.2007 மாலை பி.ப 4.00 மணியளவில் தமிழீழ மக்கள விடுதலைக்கழக சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சுவிற்சர்லாந்தின் சூரிச் மாநிலத்தில் நடைபெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எப் ஜேர்மன் கிளை சார்பில் தோழர் அலெக்ஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் சுவிஸ் கிளை சார்பில் தோழர் செந்தா, புளொட் ஜேர்மன் கிளை சார்பில் தோழர் அப்பன் ஆகியோர் நினைவுச் சுடரேற்ற, நிகழ்வுகள் ஆரம பமானது. இந் நிகழ்வில் பல நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு நம் வீரமக்களை நினைவு கூர்ந்து தங்கள் உணர்வு பூர்வமான மலர் அஞ்சலியை செலுத்தினர். பல கலை நிகழ்சிகளும் நடை பெற்றன.

### விழா மேடையைச் சிறப்பித்த நிகழ்வுகள்



திரு. முருகதாஸ் அவர்களின் மேற்பார்வையில் சுவிஸ் வாழ் சிறார்களின் வினோத உடைப்போட்டியை தொடர்ந்து பரதம விருந்தினராக கலந்து கொண்ட மூத்த தமிழ் அரசியல்வாதியும், தமிழ் மக்களின் உரிமைக்காய் குரல் கொடுத்து வருபவரும், புலிப் பாசிசத்திற்கு எதிராக நெஞ்சுறுதியுடன் செயற்பட்டு வருபவருமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்களையும் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த ஈ.பி.ஆர்.எல்எப் பத்மநாபா இன் பொதுச செயலாளர் சிறிதரன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோரையும் தமிமீழ மக்கள் கல்விக் கழகத்தின் மாணவியர்கள் மலர்ச்செண்டுகள் வழங்கி வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து மாணவ, மாணவியர்களுக்கான பொது அறிவுப் போட்டி திரு. நடராசா பாலசுப்ரமணியம், செல்வி. சிந்து சுதாகரன், செல்வி. மயூரி மதியழகன் ஆகியோரால் நாடத்தப்பட்டது. அடுத்ததாக காமதேனு கல்விக்கழகத்தின் நெறியாள்கையில் பிரேமன் ஸ்ரட் மியூசிக் எனும் நாடகம் இடம்பெறறது. தொடர்ந்து செல்வி அனுத்திகா ஜெகநாதனின பரதநாட்டியமும் கவின் கலாசூரி திரு. எதிர்வீரசிங்கம் அவர்களின் நெறியாள்கையில் மனமாற்றம் எனும் சமூக நாடகமும் மேலும் கவிதை, நடனம், பின்னணி இசைக்காடுதல், கீபோர்ட் வாசித்தல் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### அமைப்புக்களுக்கு தடை விதிக்கும் போக்கை புளொட் ஏற்காது சுவிஸ் ரஞ்சன்

நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அங்கு பேசிய புளொட் சுவிஸ் ரஞ்சன் இவ் வருடம் மேதின கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட எமது உறுப்பினர்கள் மீது புலிகள் ஓர் திட்டமிட்ட தாக்குதலை தொடுத்திருந்ததாகவும் இவ்வாறான அராஜகங்களில் தமக்கு எவ்வித ஈடுபாடும் இல்லை என்றும் இலங்கையின் ஜனாதிபதி ஜெனீவா வந்திருந்த போது தாம் எம் மக்கள் தாய் நாட்டில் எதிர்கொள்கின்ற குறைகளை எடுத்துரைக்கவே சென்றிருந்ததாகவும் மாறாக அவற்றை புலிகளின் ஊடகங்கள் தவறான வழியில் பிரச்சாரம் செய்வதாகவும் தெரிவித்திருந்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் மட்டு நகரில் ஈபிடிபியினருக்கும் ரி.எம்.வி.பி யினருக்கும் இடையில் உருவாகியிருக்கும் முறுகல நிலை துரதிஸ்டவசமானது என்றும் ஈபிடிபி யினரால் ரிஎம்விபி யினர் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை சம்பவத்தை புளொட் கண்டிப்பதாகவும் எந்தவொரு அமைப்பும் தமக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை ஆயுத ரீதியாக தீர்க்கக் கூடாதெனவும் தெரிவித்ததோடு கிழக்கில் உதயசூரியன் படைப்பிரிவு எனும் பெயரில் ஈ.பி.டி.பியினரை கிழக்கில் தடை செய்வதாக வெளியிடப்பட்டிருக்கும் துண்டுப் பிரசுரத்தின் பின்னணியையும் கண்டிப்பதாகவும் எந்தவொரு அமைப்பும் மாற்று அமைப்புக்களை தடை செய்ய நினைக்கும் சர்வாதிகாரப் போக்கை எக்கால கட்டத்திலும் புளொட் அமைப்பு ஏற்காதெனவும் கூறியிருந்தார்.

### தமிழீழம் என்பது அடைய முடியாததோர் இலக்கு த. சித்தார்த்தன் — புளொட்

அங்கு உரையாற்றிய புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் அவர்கள் உரையாற்றுகையில் எம் தேசத்தின விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த எம் வீரமறவர்களை நினைவு கூரும் இத் தருணத்தில் விடுதலையின் பெயரால் வேட்டையாடப்பட்ட அனைத்து மக்களையும் நினைவு கூர்ந்து, அவர்களை சிரம்தாழ்த்தி வணங்குவதில் என் மனம் திருப்தியடைகின்றது என்றார். மேலும் அவர் பேசுகையில் தமிழீழம் என்பது அடைய முடியாததோர் இலக்கு என்றும் தமிழீழ கோரிக்கையை இந்திய அரசு என்றுமே அனுமதிக்க போவதில்லை என்றும் தெரிவித்தார். புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் நல் வாழ்வில அக்கறை கொண்டவர்களாக செயல்படவில்லை என்றும் இதன் வெளிப்பாடாகவே புலிகள் தீர்வு யோசனைகளை புறந்தள்ளி அரசின் தமிழ் மக்கள் மீதான அக்கறையின்மைக்கு உதவி வருவதாக குறிப்பிட்டார். புலம் பெயர் மக்கள் புரையோடிப் போயிருக்கும் இவ் யுத்தத்திற்காக புலிகளுக்கு நிதியுதவி செய்வதை விடுத்து புலிகளை ஓர் நியாயமான தீர்வை நோக்கி நகர அழுத்தங்களை கொடுக்க வேணடும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### மூன்று தசாப்த படுகொலைகளால் சாதித்தது என்ன? ஸ்ரீதரன் — ஈ.பி.ஆர்.எல்.எப்

நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எப்-(பத்மநாபா) பொதுச்செயலாளர் தி.சிறிதரன் அவர்கள் உரையாற்றும் போது உயரிய கனவுகள், லட்சியங்களுடன் போராடப் புறப்பட்டவர்களைத் தான் புலிகள் சகோதரப் படுகொலையை அறிமுகப் படுத்தி, அரங்கேற்றி அழித்தொழித்து வருகிறார்கள். ஆயுதமேந்திய இயக்கத்தின் வரலாறு 30ஆண்டுகள் என்றால் சகோதரப் படுகொலையின் வரலாறும் 30 ஆண்டுகள தான். அரசபடைகள், பேரினவாதிகள் கொன்றதற்கு அப்பால் சகோதரப் படுகொலைகள் வாயிலாக கொல்லப்பட்டவர்களின் தொகையை ஆராயப் போவோமானால் அது எம்மை அதிர்ச்சியில் உறைய வைக்கும். துரோகிகளை ஒழித்துக் கட்டுதல் என்பதன் பேரில் மூன்று தசாபத படுகொலைகளால் சாதித்தது என்ன? என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். மக்களை நடுத தெருவுக்கு கொண்டு வந்ததையா......, சொந்த ஊர்தேசம் இல்லாமல் செய்த நிலைமையையா...... அல்லது ஊன முற்றவர் தொகையை அதிகரித்தமையையா.... சுடுகாடென்று தனி இடம் தேவையில்லை ஓரே சுடுகாடாக இருக்கட்டும் என்ற நிலையை வடக்கு கிழக்கு முழுவதும் உருவாகியதையா..? என தனது உரையில் கேள்வி எழுப்பினார்.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் தமது பிள்ளைகளுக்கும் உற்ற சுற்றத்திற்கும் எத்தகைய வாழ்வு கிடைத்திருக்கிறது என்பதை புலம் பெயர் தளத்திலுள்ள மனச் சாட்சி உள்ளவர்கள் ஒப்புக்கொள் வார்கள். இவர்கள் ஒரு கணம் மட்டக்களப்பில், திருமலையில், யாழ்ப்பாணத்தில் சிதறுண்ட நிலையில் அகதி முகாம்களில் தார்ப்பலின் சீலைகளின் கீழ் வாழும் மக்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். சோமாலிய குழந்தைகள் போல் உப்பிய வயிற்றுடன் நிற்கும் எமது குழந்தைகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கவீனமான நிலையிலும் நான் படித்து ஆளாக வேண்டும் என கனவு காணும் இந்த அகதிச் சிறார்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலகின் நவீன, நானாவித பீரங்கிகளின் சத்தங்களால் காது செவிடாகிப் போய் மனம் பேதலித்து போன மக்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமது பிள்ளைகளை எப்போது யார் இறாஞ்சிக் கொண்டு போவார்களோ என அங்கலாய்த்து நிற்கும் பெற்றோரை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடந்த ஒரு வருடத்திற்த மேலாக பாடசாலை செல்லாமல் கண்களில் தேடலுடன். மனம் வெதும்பி நிற்கும் குழந்தைகளை பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த கால் நூற்றாண்டுகளில் தங்கள் பிள்ளைகளையும் பொருளையும் போராட்டத்திற்கென தியாகம் செய்துவிட்டு தற்போது பிள்ளைகளையும் இழந்து வீடு வாசல் களையும் இழந்து எல்லாம் வீணுக்கு இறைத்து விட்டதாக மனம் புண்பட்டு நிற்கும் மக்கள் குறித்துச் சிந்திக்க வேண்டும். உற்ற சுற்றம் கண்ணுக்கு முன்னே செத்து வீழ்ந்ததை பார்த்து விட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களின்- மனிதர்களின் மனவலி எத்தகையதெனப் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

*(இவ் உரை முழுவதையும்*
**http://www.plote.org**
**http://www.eprlf.net**
**http://www.theneeweb.de**
*ஆகிய இணையத் தளங்களில் பார்வையிடலாம்)*

### புலிகளின் தாகம் தமிழரின் பச்சை இரத்தம் வீ. ஆனந்தசங்கரி — த.வி.கூ



நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த தமிழர் விடுதலைக் கூடடணித் தலைவரும் மூத்த தமிழ் அரசியல் வாதியுமான திரு.வீ. ஆனந்தசங்கரி அவர்கள் பேசுகையில் எம்மின மக்கள் மீது அக்கறை கொண்டவர்களாக தமது இளவயதில் தம் இன்னுயர்களை துச்சமென மதித்து போராடப் புறப்பட்டு உயிர்நீத்த போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் அஞ்சல் செலுத்தும் இவ் வீரமக்கள் தின நிகழ்வுகளில் தொடர்சியாக நான்காவது முறையாக கலந்து கொண்டு அவர்களின் தியாகங்களை கௌரவிப்பதை பெரும்பேறாக கருதுகிறேன். மேலும் நாம் இங்கு புளொட் உட்பட அனைத்து மாற்று இயக்கங்களின் அங்கத்தவர்களையும் நினைவு கூரும் இத்தருணத்தில் அடையமுடியாத ஓர் இலக்கை நோக்கி புலித்தலைமையின் தவறான வழிநடத்தலில் உயிர்நீத்த சுமார் இருபது ஆயிரம் புலி உறுப்பினர்களையும நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம் என்றார். புலிகள் இத்தனை ஆயிரம் இன்னுயிர்களையும் புலிகளின் தாகம் தமிழீழ தாயகம எனும் கொள்கையை முன்வைத்து பலி கொடுத்துள்ள போதும் அவர்களின் செயல்களுக்கும் இக்கூற்றுக்குமிடையில் பெரும் இடைவெளி நிலவுவதாகவும் தனது அனுப வத்தில் புலிகளின் தாகம் தமிழரின் பச்சை இரத்தம் என்றே கண்டுள்ளதாகவும் தெரிவித்தார் (இக்கருத்தை தெரிவிக்கையில் பொது மக்களிடம் இருந்து பெரும் கரகோஷங்கள் கிளம்பியது) தொடர்ந்து பேசுகையில் த.வி.கூ., ஈ.பி.ஆர்.எல்எப், புளொட் ஆகிய அமைபுகள் எம்மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு சுய கட்சி நலன்களுக்கப்பால் கூட்டாக செயல்ப்பட்டு வருவதாகவும் அவற்றால் தாங்கள் கண்ட வெற்றிகளினூடாக தாம் ஒரு கூட்டு முன்னணியாக இயங்கி வருகின்றோம் என்று இந்த புனிதமான நாளில் உங்களிடம் தெரிவிப்பதையிட்டு மனமகிழ்சியடைகிறேன். இந்நிலையில் எம் தேசத்து மக்களின் நலனை விம்புகின்ற ஆயுத கலாச்சாரத்தை வெறுக்கின்ற எந்த அமைப்புகளையும் சேர்த்து செயல்ப்பட நாம் தாயாராக இருக்கின்றோம் என்றும் அதற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு பொது மக்களாகிய நீங்களும் அழுத்தங்களை கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.




### பரிசில்கள் வழங்கல், நன்றியுரை

அதிதிகளின் உரையை தொடர்ந்து 10.06.07 அன்று தமிழீழ கல்வி கழகத்தினரால் நிகழ்த்தப்பட்ட பரீட்சைகளில கலந்து கொண்டு சிறந்த பெறுபேறுகளை பெற்றவர்களுக்கான வெற்றி கேடயங்கள வழங்கப்பட்டது. இறுதியாக புளொட் அமைப்பினரின் நன்றியுரையில் விழாவைச் சிறப்பாக நடாத்த உதவிய கழகத் தோழர்கள் ஆதரவாளர்கள் மாற்று அமைப்பினரின் தோழர்கள் மற்றும் நண்பர்களுக்கும் கல்விக் கழகத்தின் செயறபாடுகளுக்கும் விழாவுக்கும் நடுவர்களாகச் செயற்பட்ட மற்றும் கலைநிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்திய திரு. செல்வராஜா திரு. முருகதாஸ் திரு. ஜவீன் திரு. வெற்றிமயில்நாதன் திரு. அரிராஜசிங்கம் திருமதி. ஜெயந்தி ஜவீன் திருமதி. ரதி செல்வராஜா திருமதி சந்திரா அரிராஜசிங்கம் திருமதி. ராணி முருகதாஸ் திருமதிபேபி கருணாகரன் திருமதிசேனா சிவசுப்ரமணியம் திருமதி. ராணி வர்ணகுமாரன் போன்றோருக்கும வீடியோ படப்பிடிப்பில் உதவிய திரு. சுதாகரன் திரு.ஞானம் போன்றோர் உட்பட பெயர் குறிப்பிட மறந்த அனைவருக்கும் நன்றி தெரித்ததுடன் விழா சிறப்புற இனிதே நிறைவுற்றது.

## றிசானாவுக்கு கடிதம்

அம்மா றிசானா மானிடத்தின்
மனச்சாட்சியை எள்ளி நகையாடி
நிற்பவளே! அதன் மீது உலகளாவிய
கேள்வியைத் தொடுத்திருப்பவளே!!

சின்னஞ் சிறுமியாக உன்முதுகில்
குடும்பத்தின் சுமைகளை ஏற்றினாய்.

சவுதிச் சிறைகளின் சுவர்களை தாண்டி
எம்மனங்களை சுக்குநூறாக்குகிறது
உன்மீது விழுந்த பாலகனைக்கொன்ற பழி.

மானிடம் அவமானத்தால் கையறு
நிலையால் குன்றி நிற்கிறது.

உம்மா வாப்பா சகோதர சகோதரிகளின்
அரவணைப்பில் சிட்டாக பறக்கவேண்டியநீ
குடும்பத்தின் பசித் தீயை அணைக்க
தொலைதூரம் தனிவழி சென்றாய்.

மத்திய கிழக்கில் சிலுவை சுமந்த
யேசுபோல் வாழும் எம் ஆயிரக்கணக்கான
சகோதரிகள் அனுபவிக்கும் துயரங்களை
தாயே! நீ தூக்கு மேடையில் நின்ற
சோக்கிரட்டீஸ்போல் உணர்த்தி நிற்கிறாய்.

பத்தாம் பசலி அடிப்படைவாத சட்டங்கள்
உன்மீது சுமத்திய கொலைப்பழி.
வியட்னாமில் நெப்பாம் குண்டுகள்
வீசப்பட்டபோது சுடுது சுடுது என்று
அவலக்குரல் எழுப்பி ஓடிய ஏதுமறியா
அப்பாவிச் சிறுவர் சிறுமியரை
கண்முன்நிறுத்துகிறது. சின்னவளே றிசானா
நீயும் அக்குழந்தைகள் நடுவே ஓடி
வருவதுபோல் ஒரு பிரமை.

அம்மா றிசானா! நீ வாழவேண்டும். நீடூழி
வாழவேண்டும். மூதூரில் சுனாமியின்
மரணப் பேரலைகளை
அனுபவமாகக்கண்ட நீ இன்று உன்
மரண மேடையில் நின்று
கொண்டிருக்கிறாய்.

நீ தோற்றால் அது மானிட மனச்சாட்சியின்
தோல்வி. இன மத பேதம் கடந்து
அமரத்துவ நிலையில் உன்மகத்தான
வரவுக்காக காத்துக் கிடக்கிறது ஒரு
தேசம்.

சின்னவளே! நீ மரணத்தை
வென்றிடவேண்டும். அது எம் மானசீக
தர்ம ஆவேசம்

நீ விமானத்தில் இருந்து இலங்கை
மண்ணில் தரையிறங்கும்போது
கண்ணீர்திரையிட்டு உணர்ச்சி மேலிட்டு
கோடி தாமரைகள் இதழ்விரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சனை தீர்வு..........

01ம் பக்கத் தொடர்ச்சி

கூடியதாகவுள்ளது. 80களில் யாழ்ப்பாணத்தில் குடிசனத்தொகை 10 லட்சம் மக்கள். 27 வருடங்களுக்குப் பிறகு 4 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இந்த நிலைமை தொடருமானால் மிகக் குறைவான ஒரு சமூகம் கல்வி, பொருளாதாரம் என அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் வாழ்கின்ற சூழ்நிலை உருவாகும்.

கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படுவதில் நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். பல வழிகளிலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். புலிகளுக்கு ஒரு நெருக்குவாரத்தை கொடுக்க வேண்டும்.உங்களுக்கு இந்த அக்கறை இருக்கிறது. போராட்டம் நீடிக்குமானால் தமிழ் சமூகம் இயற்கை மரணத்தை எட்டும். போராட்டமென்றால் அழிவு இருக்கும். அழிவுதான் போராட்டமல்ல. அங்கு வாழ்கின்ற மக்கள் போதுமென்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள். தமிழர்களை பொறுத்தமட்டில் முன்பு சிறப்பாக வாழ்ந்தார்கள். கையேந்தி வாழ்ந்திராத அவர்களின் அகதி வாழ்க்கை முடிவுக்கு வரவில் லை. வடக்கில் உள்ள மக்களுக்கு வெளிநாட்டில் ஒருவராவது உதவியாக இருக்கின்றனர்.

ஆனால் கிழக்கில் அத்தகைய நிலைமை இல்லை. வாகரையை இராணுவம் கைப்பற்றியபோது அங்கு புலிகளின் பங்களர்கள் அரசி மூட்டைகளாலும், பருப்பு மூட்டைகளாலும் நிரப்பப்பட்டிருந்தது. மக்களை அரசு பட்டினி போடுகிறது என்கிற குற்றச்சாட்டு புலிகளின் ஊடகங்களால் முன்வைக்கப்பட்ட காலத்தில்தான் இந்த நிலைமைகளை நாங்கள் கண்கூடாக பார்த்தோம். நாங்கள் சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகள், அரசியல் கட்சித்தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள மத்தியில் தீர்வுத்திட்டம் தொடர்பாக சில விடயங்களை எடுத்துக்கூறி வருகின்றோம். தமிழ் மக்கள் என்ன கேட்கிறார்கள் என்பது தெரியாது என சொல்லக்கூடாது என்கிற வகையில் நாம் சில விடயங்களை குறிப்பிட்டு வருகிறோம். நீண்ட காலத்திற்கு இந்த யுத்தத்தினை நீடிக்கவிடாமல் தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

### ஈ.பி.ஆர்.எல்.எப்– பத்மநாபா அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் ஸ்ரீதரன

தோழர் தி. ஸ்ரீதரன் உரையாற்றும் போது இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தமைக்கு இலங்கையர் ஜனநாயக முன்னணிக்கு எமது நன்றிகள். இது போன்ற பகிரங்கமாக மக்கள மத்தியில் பேசி பல வருடங்களாகி விட்டன. ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு சமூக மாற்றம், தீண்டாமைக்கு எதிராகவும், பெண்களின் உரிமைகள் குறிதது‌ம் பிரதேச பாரபட்சம் குறித்து அக்கறை கொண்டவர்களாக உள்ளோம். தற்போது நாங்கள் திரு. ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் சித்தார்த்தன் அவர்களுடன் கூட்டாக ஒரு இணைவை ஏற்படுத்தியிருக்கிறோம். இது தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்காக அவர்களுக்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் இணைந்து செயற்பட முன்வந்துள்ளோம்.

பல வருடங்களுக்கு முன் இது போன்ற பல சந்திப்புக்களை மக்கள் மத்தியில் நடாத்தியிருக்கிறோம். 1979 இன் பிற்பகுதியில் ஈழ மாணவர் பொது மன்றம் மாணவர்கள் மத்தியில் தேசிய விடுதலையுடன் சோசலிச புரட்சி கனவுகளுடன் வேலை செய்து வந்தோம்.

1978 இல் இனபம், செல்வம் போன்றவர்கள் கொலை செய்யப்பட்ட காலத்தில், புன்னாலை கட்டுவனில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒருவரை கொன்று அவரின் வாயில் இரத்தத்தை பருக்கியதை நாம் எதிர்த்து குரல் கொடுத்திருக்கிறோம். வடக்கு கிழக்கில் நாம் இவ்வாறு சிறு சிறு போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறோம்.

நாம் ஈழம் என்று வலியுறுத்தியிருந்தது மலையக மக்களை சேர்த்திருந்தோம். சிங்களவனுக்கு மூத்திரம் பெய்ய ஒரு இடத்தையாவது கொடுங்கள் என்ற குரல்கள் எழும்பிய போதும் நாங்கள் உழைக்கும் மக்களாகிய மலையக மக்களின் விடிவிற்காக அவர்களின் வாழும் பிரதேசத்தையும் எமது போராட்டத்துடன் இணைத்திருந்தோம்.

எப்போது உடல் ரீதியாக அழிக்கின்ற போக்கு எமது சமூகத்தில் தோன்றியதோ அன்றே மக்கள் போராட்டத்தில் மீது இருந்த நம்பிக்கையை அழித்தது. 86களில் இது இன்னும் அதிகமாகியது. எங்களுக்கு என்ன சொல்ல வேண்டும் எனத் தெரிய வேண்டும். கருத்து மூலம் பௌதிகமான வன்முறை மூலம் ஆக்கிரமிக்கின்ற போக்கு காணப்படுகிறது. இந்த ஆதிக்கம் செலுத்துகிற போக்கு எங்களுக்கு என்ன ணேடும் என சொல்ல விடுவதில்லை. தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க எங்களுடைய பக்கத்தில இருந்து சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. பண்டா-செல்வா ஒப்பந்தத்தை இதில் முக்கியமாக குறிப்பிடலாம். ஆனால் அவை பேரினவாதத்தால் கிழித்தெறியப்பட்டது. தனிச் சிங்கள சட்டத்தின் குழந்தைகளாக ஜே.வி.பி யும் தமிழ் இயக்கங்களும் உருவாகின.

பிரச்சனை கூர்மையடைந்து யுத்தமாகியது. சிங்கள மககளுக்கு எதிரானதல்ல எனக் கூறினாலும் சில சம்பவங்கள் அம் மக்களுக்கு எதிராகவே நடைபெற்றுள்ளன. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் மாகாணசபைத் தீர்வு எட்டப்பட்டாலும் நாங்கள் துரோகிகளாக புலிகளால் சித்தரிக்கப்பட்டோம். திருகோணமலையில் தலைமையகம் வைத்து மாகாணசபையை செயற்படுத்தினோம். தீர்வுத் திட்டம் தொடர்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண முன்வைத்த தீர்வு யோசனைகளை கையிலெடுத்து அதில் உள்ளடக்கபடாத சில வடயங்களை உள்ளடக்கி நாங்கள் தீர்வை முன்வைத்தோம்.

புலிகள் தமிழ் மக்களிடையே இருந்த பல விடயங்களை அழித்தொழித்து விட்டது. புலி இருக்க வேண்டும என பேரினவாதம் விரும:புகிறது. புலிகளை வைத்து சர்வதேச ரீதியாக பிரச்சாரம் செய்கிறது. 16 லட்சம் மக்கள்தான் வடக்கு கிழக்கில் உள்ளனர். இன்னும் சில நாட்களில் இதன் தொகை குறைந்து விடும். சுனாமியால், சூறாவளியால் அழிந்து இந்த மக்களை இந்த போராட்டம் பிச்சையெடுக்கின்ற நிலைமையாக கொண்டு வந்து விட்டது. மக்கள் மீளக்குடியேற்றப்பட்டாலும் நெருக்கடிகள் இருக்கின்றன.

இந்த சமூகத்தில் ஒரு நோயாக புலிகள் உள்ளனர். அது சமூகத்தை நடுத்தெருவிற்கு கொண்டுவந்து விட்டது. அது 20,000 விதைக்கப்பட்டிருக்கினம் என்று சொன்னால் அதில் 50 வீதம் சிறுவர்களாகவே உள்ளனர். இந்த சமூகத்திற்குள் அது அழிவை மாத்திரம்தான் பிரகடனப்படுத்தியிருக்கிறது. தமிழ் ஊடகங்கள் இந்த அழிவை வழிபடுகின்றன. புலம் பெயர்ந்த மக்களை பொறுத்தவரை புலிகள் விமானம் விடுவது ஒரு போதையாக உள்ளது. வன்னியில் கொல்லப்பட்ட சிறுவர்கள் உடல்கள் வண்ணப்படங்களில் இங்கு காட்டப்படுகின்றன. குரூரம் விற்கப்படுகிறது.

கிழக்கில் வாழ்கின்ற மக்களிடையே புலிகளின் விமானத்தைப் பற்றி என்ன அக்கறை இருக்கிறது. டெலோ இயக்கத்தினரை கொன்ற கொடூரத்தை மறக்க முமடியுமா? தோழர் பத்மநாபாவின் அஞ்சலிக் கூட்டத்தில் தோழர் ஜெயகாந்தன் ஒருமுறை பேசும்போது குறிப்பிட்டார். புலிகள் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும், இந்தியாவிற்கும் ஏன் தமக்கும் நண்பர்கள் இல்லை எனக் குறிப்பிட்டார்.

எமது சமூகத்தினுள் கொலை விருட்சத்தை வளர்த்து விட்டது யார்? தமிழ் பாசிசத்தின் கூறுகள் எமது சமூகத்தினுள் இல்லாமல் இருக்கிறதா? எமது சமூகத்தினுள் இருக்கக்கூடிய கூறுகளின் வெளிப்பாடுகள்தான் இவை.

இணைந்த வடக்கு கிழக்கில்தான ஒரு தீர்வு என்பதை ஏற்றுக் கொள்கிறோம். 19 வருடங்களுக்கு முன் சிங்களவர்கள் பெருபான்மையாக இருக்கின்ற கட்டமைப்பை ஏற்றுக்கொண்டு வந்துள்ளோம். தமிழ் மக்களின் பிரச்சனை 60 வருடங்களுக்கு மேலாக உள்ள பிரச்சனை. நாங்கள் பிரிவினையை பற்றி கதைக்கவில்லை. குறைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வை பற்றித்தான் கதைக்கின்றோம். இரு பகுதி மக்களும் சேர்ந்து வாழ வேண்டிய ஒரு அதிகாரப் பகிர்வுக்கு நாங்கள் வரவேண்டும்.

வடக்கு கிழக்கில் எல்லாம் பறித்தெடுக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யாமல் ஒரு தீர்வை எட்ட முடியாது. சிங்கள மக்கள் இதற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். பாசிச சக்தி என்பது வன்முறையை கைவிட்டு வரும் என எதிர்பார்க்க முடியாது. புலிக்கு மாற்றாக ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். சிறிய ஊருக்குள் இருக்கு மட்டும் இந்தப் பிரச்சனை பூதாகரமாகத் தெரியும். இலங்கை முதல் ஆப்கானிஸ்தான் வரை எமது பார்வைகள் விரிய வேண்டும். ஜே.வி.பி நல்ல ஆட்கள். சுனாமியால் உதவி செய்தவை. பிரச்சனையென்னவென்றால் அதிகாரப்பகிர்வுக்கு உட்பட்டால் புலிக்கு சாதகமாக போகும் என கருதுகிறார்கள். கதைச்சுப் பேசி இயலுமானவரை முயற்சி செய்ய வேண்டும். உருப்படியாக மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய தீர்வு முன் வைக்கப்பட வேண்டும்.

ஜனநாயக இடைவெளி ஒன்று தற்போது தேவை. 20 வருட காலத்தினுள் எந்த வகையான ஒரு முற்போக்கு அரசியலை செய்திருக்கிறோம். முன்பு அரசியல் நாகரீகம் இருந்தது. தற்போது அது இல்லை. ஜோர்னலிசத்தின் நாகரீகம் இருக்க வேண்டும். சமூகத்தினுள ஒரு நேர்த்தியான ஒரு வரைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். சமூகம் நலமடிக்கப்பட்டு விட்டது. அதன் வீரியம் இழக்கப்பட்டு விட்டது. இவ்வளவு காலம் பட்ட துயரங்களுக்கு நல்லதொரு தீர்வு எட்டப்பட வேண்டும். இங்குள்ள புலம் பெயர் மக்கள் எதற்காக பணத்தை புலிகளுக்கு வழங்குகிறார்கள் என்றால் அது மக்கள் சாவதற்கு அனுப்பப்படுகிறது. புலிகளின் ஐரோப்பிய வன்முறைகள் குறித்த ஒரு கருத்தின் போது ஐரோப்பிய மக்கள் நாகரீகமானவர்கள். பண்பானவர்கள் ஆகவே அங்கு நாங்கள் அதை செய்ய மாட்டோம் என தமிழ்ச்செல்வன சொல்கிறார். இப்படி பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது. எமது மக்களுக்கு என்ன மரியாதை இருக்கிறது.

கொல்லப்பட்ட சமூகம் இன்றிருந்தால் அது ஒரு பெரிய சமூகம் பலம். மலையக மக்கள் சார்பாக சந்திரசேகரும், தேவராஜும் முன் வைத்திருக்கும் கோரிக்கைகள் கரிசனைக்கு ஏற்கப்பட வேண்டும். நாங்கள் இன்று ஐக்கிய முன்னணி அமைத்திருக்கிறோம். அதில் ஒரு வரலாற்றுப் பாத்திரத்தை ஆனந்தசங்கரி அவர்கள் ஏற்றிருக்கிறார். அஞ்சாமல் குரல் கொடுக்கின்ற ஒருவர் தலைமை ஏற்றிருக்கிறார். ஒரு பரந்த ஐக்கியம் தேவை. தனித்துவங்கள், கருத்துக்கள் அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். எங்களது சமூகத்தை ஒரு மறுமலர்ச்சிக்கு கொண்டுவரவேண்டும் நாங்கள் எமது சமூகம் சுபீட்சமாக வாழ்வதற்கான கனவை நாங்கள் காண வேண்டும். எமது சமூகம் செம்மைபடுத்தப்பட வேண்டும். 85 இற்குப் பின் மக்களிடையே போய் வேலை செய்யக்கூடிய சுதந்திரம் இல்லாது போய் விட்டது. பரந்தளவில் நாங்கள் ஐக்கியப்பட்டு வேலை செய்ய வேண்டும். என தோழர் சுகு அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

### த.வி.கூ. தலைவர் திரு வீ. ஆனந்தசங்கரி

முதலில் அனைவருக்கும் எனது வணக்கங்கள். இன்றைய சமுதாயம் நாங்கள் கூறுவதை கேட்பதை காண்கிற போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் 50 ஆண்டுகள் அரசியலில் ஈடுபட்டவன். 17 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்டு வந்திருக்கிறேன். புலிகளால் கடந்த தேர்தலில திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டேன். 2004 இல் நடைபெற்ற தேர்தலில் எவ்வாறு புலிகள் நடந்து கொண்டார்கள் என்பதை அறிவீர்கள். மக்களை சுதந்திரமாக வாக்களிக்க விடவிலலை. எம்மை சுதந்திரமாக பிரச்சாரம் செய்ய விடவில்லை. வாக்குகள் மோசடி செய்யப்பட்டு தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டது. பல்வேறு நாடுகளில் இருந்து குறிப்பாக ஐரோப்பிய யூனியன் கூறியது இத் தேர்தல் செல்லுபடியற்றது என்றார்கள். விடுதலைப் புலிகளின் சின்னம் தேர்தல் பெட்டியில் ஒட்டப்பட்டிருந்த கொடுமையும் அப்போதுதான் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளுக்கு என்ன அருகதை இருக்கிறது. எமது மக்களுக்காக பேசுவதற்கு. நாங்கள் எமது பெருமைகளை இழந்து விட்டோம். மனிதப் பண்புகள் மறக்கடிக்கப்பட்டு விட்டன. ஏன்? சிங்கள பொலிஸ் அதிகாரி ஒருவர் சமாதானம் பேசவந்ததற்காக அவரை கொன்று குவித்தார்கள். இணுவிலில் நடந்த இச் சம்பவத்திற்காக அங்குள்ள பலர் என்னிடம் வருத்தப்பட்டார்கள். எமது கலாச்சாரம், கல்வி எல்லாம் போய்விட்டது. பல கல்விமான்கள் இல்லாது போய் விட்டார்கள். இந்த போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் தரப்படுத்தலை எதிர்த்துதான். ஆனால் இன்று எமது கல்வி அந்த போராட்டத்தினாலேயே சீரழிந்து போய் விட்டது. 27 நாட்கள் பாடசாலை நடக்க விடாது புலிகள் தடுத்திருந்தார்கள்.

புலிகளின் போராட்டத்திற்காக இப் பாடசாலைகள் மூடப்பட்டன. தமிழ் சமூகத்தன் கல்வி சீர்குலைக்கப்பட்டது. கண்டி ஏ-9 வீதி 10 வருடங்களுக்கு முன் மூடப்பட்டிருந்தது. விவசாயத்தை, மீன்பிடியை குலைத்தது யார்? கிளிநொச்சியில் உள்ள சந்தையில் யாழ்ப்பாணத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற அத்தனை பொருட்களும் அங்கு வரும். பலரும் அங்கு சந்தையில் வியாபாரம் செய்தார்கள். பல்வேறு பிரதேசங்களில் கொண்டு வந்த உற்பத்தி பொருட்கள் இச் சந்தையிலே விற்பனை செய்யப்பட்டன. இன்று அவர்களின் நிலை என்ன?

சீமெந்து தொழிற்சாலையில் 1500 போர்வரை வேலை செய்தார்கள் இன்று அந்த தொழிற்சாலையின் நிலைமை என்ன? பரந்தன் தொழிற்சாலையின் இன்றைய நிலை என்ன? இன்று அரசின் பிச்சை சம்பளத்தில் வாழ வேண்டிய நிலையிலேயே மக்கள் உள்ளார்கள். தமிழீழம் என்பது முடிநத கதை. தமிழீழம் நாங்கள் கேட்டோம் தீர்மானம் எடுத்த மறுகணமே நாங்கள் அதைக் கேட்டோம். இந்தியா தமிழீழத்தை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்தியாவில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் தமிழீழத்தை அங்கீகரிக்கப் போவதில்லை.

எமது நாட்டில் எமது மக்களுக்கு திருப்தியான வாழ்க்கை இல்லை. நிம் மதியான வாழ்கை இல்லாததால அவர்களுக்கு தேசிய கொடி மீதோ தேசிய கீதமோ நம்பிக்கை இல்லை. மதன்சிங் ஜித் விருது இலங்கை அரசினால்தான் எனக்கு வழங்கப்பட காரணமாக இருந்தது என ஒரு இணையத்தளம் ஒன்றில் எழுதியிருக்கிறார்கள். எதை எழுதுவது என்று தெரியாமல் எழுதுகிறார்கள். இனப்பிரச்சனையின் தீர்வு குறித்து மகாநாயக்கா தேரோவை சந்தித்தது தொடர்பாக பலருக்கு மகாநாயக்கா தேரோவை எதற்காக சந்தித்தேன்? தேசிய இனப்பிரச்சனை தீர்வு குறித்த எமது ஆலோசனைகளை நான் அவரிடம் கூறினேன். அண்மை யில் அவர் ஆனந்தசங்கரி எதைக் கேட்டாலும் கொடுங்கள் என்று அவர் கூறியிருக்கிறார். அதன் அர்த்தத்தை புரிய வேண்டும்.

வடக்கிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றி கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அவர்களை பிரித்து வைத்திருக்கிறார்கள். சிங்களவர்கள் எல்லோரும் பேரினவாதிகள் அல்லர். எமது பிரச்சினைகளை புரிந்து கொள்ளக்கூடியவர்கள் அங்கு இருக்கிறார்கள். தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்களுக்கு நான் ஒருகாலத்தில் கல்வி போதித்திருக்கிறேன். சிங்கள மக்கள் வகுப்பு வாதிகள் அல்லர் வகுப்புவாதிகளாக சித்தரிகப்பட்டு இருக்கிறார்கள் இன்று சிங்கள மக்கள் இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் தயாராகி விட்டார்கள்.

எவ்வாறு இனப்பிரச்சனையை தீர்க்கலாம். நாங்கள் மூன்று பேரும் ஒன்று சேர்ந்திருக்கிறோம். எமக்கு வேண்டும் எமது மகளுக்கான நிம்மதி. எதிர்காலத்தில் வேறு பலரையும் இணைத்துக் கொள்வோம். தீர்வு திட்டத்தை முன்வையுங்கள் என கேட்டிருந்தோம். இந்தியாவில் நாங்கள் மூவரும் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டியிருந்தோம். ஜனாதிபதியிடம் இந்திய முறையிலான தீர்வு திட்டத்தை முன்வையுங்கள் என பகிரங்கமாக கேட்டிருந்தேன். இதை தென்னிலங்கை கட்சித் தலைவர்களுடனும், சர்வதேச பிரதிநிதகளுடனும் உரையாடும்போது குறிப்பிட்டிருந்தேன். இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான உங்களுடைய சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க தயாராக இருக்கிறேன். என்றார்.

# தலித் அறிக்......

10ம் பக்கத் தொடர்ச்சி

க்கு மத்தியிலும் நடைபெற்று வந்திருக்கிறது. எனவே நாம் இவ்வறிக்கை மூலமாக கடந்த காலங்களில் யாழ்ப்பாண மேலாதிக்க சாதியினரால் அன்றிலிருந்து தலித் மக்கள் பட்ட துயரங்களையும், அதற்கெதிராக அவர்கள் நிகழ்த்திய போராட்டங்களையும் நினைவுறுத்துவதோடு, எதிர்காலத்தில எமது ஒடுக்கப்பட்ட சமூகமானது யாழ்ப்பாண மேலாதிக்க சமூகத்துடன் சம அந்தஸ்துடன் இணைந்து வாழ்வதற்குரிய, எமக்கான தனித்தவமான அரசியல் உத்தரவாதங்களை இவ்வறிக்கை மூலமாக சமர்ப்பிக்கின்றோம்.

பல நூறு ஆண்டுகளாக மனிதர்களாகவே மதிக்கப்படாத தலித்துக்கள் 1910 ஆம் ஆண்டிலிருந்தே வட பகுதி தொழிலாளர் சங்கம் மூலம் தமது உரிமைக்காக ஸ்தாபன ரீதியாக போராட முற்பட்டனர். இக்காலப் பகுதியில் ஆங்கிலேய மிசனெரியால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கல்லூரியில் ஜெகப் காந்தி என்னும் தலித் மாணவன் அக் கல்லூரியில் அனுமதி கேட்டபோது யாழ்ப்பாண உயர் சாதி மாணவர்கள் பாடசாலையை பகிஸ்கரித்து போராட்டம் நடத்தினர். ஜேகப் காந்தியும் சளைக்காமல் தனது கலலூரி அனுமதிக்கான போராட்டத்தை நடத்தியதனாலும், அப்பாடசாலையில் அதிபராக நியமிக்கப்பட்டிருந்த ஆங்கிலேய பாதிரியாரின் மனிதாபிமான முன்னெடுப்புமே ஜேகப் காந்தி அப்பாடசாலையில் யாழ்ப்பாண வரலாற்றில் முதல் தலித் மாணவனாக அனுமதிக்கப்பட்ட நிகழ்வு சாத்தியமானது.

சிறிய சிறிய போராட்டங்களை ஆரம்பித்து படிப்படியாக தலித் மக்களுக்கான விழிப்புணர்ச்சி வளர ஆரம்பித்தது. 1927 ஆம் ஆண்டு யோவே போல் என்பவரால் ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம் என்னும் ஸ்தாபனம் அமைக்கப்பட்டு, தலித் மக்கள் மத்தியில் சமூக விடுதலையின் அவசியத்தை உணர்த்து முகமாக "ஜன தர்ம போதினி" எனும் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது. 1928 இல் சேர் பொன் இராமநாதன் 79 கிராம சங்க பிரதிநிதிகளுடன் சாதி அமைப்பு முறைப் பாடசாலைகள் கொண்டுவர வேண்டும் எனக் கோரி வெள்ளைக்கார தேசாதிபதியிடம் மனுக்கொடுத்து வலியுறுத்தினார்.

1929 இல் சாதி வெறியர்களை ஒன்று திரட்டி இந்து மகாசபையின் தலைமையில் கோப்பாய் அரசினர் பயிற்சி சாலையை உயர் சாதியினரின் தனி ஸ்தாபனமாக ஆக்குமாறும் தேசாதிபதியிடம் மனுக்கொடுத்தார். இராமநாதன்.

இவைகளெல்லாம் எதிர்த்து நின்று யோவே போல் போன்ற தலித் தலைவர்கள் அம் முயற்சிக்கு எதிராக உறுதியான போராட்டங்களை முன்னெடுத்தனர். 1930 களில் தலித்துக்களின் போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாத கோழைத்தனத்தால், தலித்துக்கள் கல்விகற்ற 13 பாடசாலைகள் உயர் சாதியினரால் எரிக்கப்பட்டது.

தொடரும்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) முன்வைத்துள்ள பிரேரணைகள்

01. இலங்கையானது "இலங்கை ஐக்கிய ஜனநாயக குடியரசு" எனும் வகையாக ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

• இவ "இலங்கை ஐக்கிய ஜனநாயக குடியரசு", இந்நாட்டில் வாழும் பல்வேறு சமூகங்களினது அபிலாஷைகளை முழுமையாக உள்ளடக்கி அவற்றைப் பேணிப்பாதுகாப்பதுடன், நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் மேம்படுத்துவதற்கு ஏதுவாகவும், சமஷ்டி, ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைக்கப்பட வேண்டும்.

• இவ் ஐக்கியக் குடியரசில், அனைத்து மாகாணங்களிலும் வாழும் பிரைஜைகளின் நியாயமான விருப்புக்களையும், அவர்களது அடிப்படை அபிலாஷைகளையும் கவனத்தில் கொண்டு, அவற்றைப் பேணி வளர்ப்பதற்கும், அம் மாகாணங்களின் சகல சமூகங்களிடையே சமாதானம், சமத்துவம், சகோரத்துவம் நிலவவும், அவர்களது உயிர், உடமைகள் ஆகியவற்றைக் பாதுகாக்கும் வகையில் ஒவ்வொரு மாகாணத்திலும் மாநில அரசுகள் உருவாக்கப்பட வேண்டும்.

• தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கு ஏதுவாகவும், நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை பேணுவதற்கும் சகல சமூகத்தினரது முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செலலும் வகையிலும், இப் பிராந்திய அரசுகள் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்கும். எவ்வாறாறெனினும் அவை இலங்கை குடியரசிலிருந்து பிரிக்க முடியாதவையாகவும், ஐக்கிய அரசுடன் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டவையாகவும் அமைந்திருக்கும்.

• நாட்டின் அரசியல் யாப்பே ஜனநாயகம், சமஷ்டி ஆகியவற்றை அடிபபடையாகக் கொண்ட அரசியல் கட்டமைப்பையும், சட்டத்தின் ஆட்சியையும மக்களது அடிப்படை உரிமைகளையும் உறுதிப் படுத்துகின்ற அதி உயர் சட்டமாகும். அதுதான், சட்டவாக்கல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள், நாட்டின் மத்திய-மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்றனவற்றை வரையறுப்பதாகவும் அமைய வேண்டும்.

குறிப்பு:- அரசியல் யாப்பை உருவாக்குபவர்கள் பிராந்திய அரசுகளுக்கு அதிகூடியபட்ச அதிகாரப் பகிர்ந்தளிப்பை மேற்கொள்வதற்கு அவசியமான அடிப்படைகளை அரசியல் யாப்பு கொண்டிருக்க வேண்டும். அதற்கு ஏதுவாக "சமஷ்டி" என்ற பதத்தை உள்ளடக்குவதில் சிரமங்களிருப்பின் அதற்கான உடனடி மாற்று ஏற்பாடாக "ஒற்றையாட்சி" என்ற பதம் அரசியல் யாப்பில் இடம்பெறாதிருக்க வகை செய்தல் வேண்டும்.

02. மத்தியிலும், மாநிலங்களிலும் பெரும்பான்மை மேலாதிக்கம் இல்லாதிருக்கச் செய்தல்

அ. புதிய அரசியல் யாப்பு எந்த சட்டவாக்க நிறுவனங்களிலும் -அதாவது.

நாடாளுமன்றத்திலோ அல்லது மாநில சட்டசபையிலோ - ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியோ அல்லது ஒரு தேசிய சமூகமோ "மூன்றில் இரண்டு பெரும்பான்மை" அதிகாரம் மூலம், மேலாண்மை செலுத்தாதவாறு அரசியல் அமைப்பில் ஏற்பாடுகள் செய்யப் பட வேண்டும்.

ஆ. தொகுதிகளை மீள் வரையறை செயதல் மூலமாகவோ, அல்லது இனப பிரதிநிதித்துவத்துகென ஒதுக்கப்பட்ட தொகுதிகள் அல்லது பல் அங்கத்தினர்- தொகுதிகளை உருவாக்குதல் என்ற ஏற்பாடுகள் மூலம், தேசிய சிறுபான்மை சமூகங்களினால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மொத்த எண்ணிக்கையானது நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாது இடம் பெறும் வகையில் அரசியல் யாப்பில் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

03. தேசிய சமூகங்களின் பேரவை - ஈரவை நாடாளுமன்றம்

தற்போதைய இலங்கையின் சமூக உருவாக்கத்தில முனைப்படைந்து நிற்கும் அம்சங்கள் மற்றும் நிலவும் அரசியல் உறவுகளின் நிலைமைகள் காரணமாக, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட யாவருமே இரண்டாவது அவையை உளளடக்கிய ஈரவை நாடாளுமன்ற அமைப்பு முறையை பெருமளவில் விவாதத்திற்கு அப்பால் ஒப்புக் கொள்கின்றனர். அனைத்து தேசிய சமூகங்களிடையே சமத்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும், நாட்டின் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பெரும்பான்மை வாய்ப்பினாலோ, அரசோச்சும் ஓர் அதிகார ஸ்தாபனத்தாலோ சட்டவாக்கம் மற்றும் நிறைவேற்று அதிகார நடைமுறைகளில் எந்தவொரு சமூகத்தினதும் அடிப்படை உரிமைகளுக்கும், நலன்களுக்கும் பங்கமேற்படாமல் இருப்பதற்கும் இந்த ஈரவை முறையானது அவசியமெனக் கருதப் படுகிறது. "தேசிய சமூகங்களின் பேரவை" என இவ் இரண்டாவது அவை அழைக்கப்படலாம். இங்கு பின்வரும் விடயங்கள் கருத்திற் கொளளப்படுதல் வேண்டும்:

அ. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோர் இலங்கையின் தேசிய சமூகத்தினர் ஆவர்.

ஆ. இப் பேரவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் தேசிய சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரின் மொத்த எண்ணிக்கையானது 40சதவீதத்துக்கு குறையாமல் இருக்க அரசியல் யாப்பில் வகை செய்தல் வேண்டும்.

இ. இப் பேரவையின் பிரதிநிதித்துவக் கட்டமைப்பானது மாநில சட்டமன்றங்களை மட்டுமன்றி பிரதேசசபைகள், தொழிற்சங்கங்கள், பல்கலைகழகப் பட்டதாரிகள் மற்றும் மாணவர்கள், கல்விமான்கள், தொழலதிபர்கள், தொழில் வல்லுனர்கள், மற்றும் ஏனைய வகையான தேசிய முக்கியத்துவமுடையோரை பிரதிநிதித்துவம் செய்வதாக அமைதல் வேண்டும்.

ஈ. இப்பேரவையானது, இரண்டாவது சபைக்கென பாரம்பரியமாக உரிய நடவடிக்கைகளுடன், நாட்டில் வாழும் சகல தேசிய சமூகங்களினது அடிப்படை அபிலாஷைகளையும், நலன்களையும் பாதுகாப்பதே அதன் பிரதான செயற்பாடாகவும் பொறுப்பாகவும் அமைய வேண்டும்.

உ. உப ஜனாதிபதியோ, அல்லது ஜனாதிபதியால் நியமிக்கப்படும் சிவில் சேவையில் உயர் உத்தியோகத்தில் மேன்மையாகப் பணியாற்றிய அனுபவமும் கொண்ட இளைப்பாறியவர் போன்ற ஒருவரோ இப்பேரவையின் தலைவராக ஆகுதல் வேண்டும்.

ஊ. நாடாளுமன்ற மக்களவையிலோ அல்லது மாநில சட்ட சபையிலோ கொண்டுவரப்படும் ஒரு தீர்மானம் அல்லது சட்டப் பிரேரணை, ஒரு குறிப்பிட்ட தேசிய சமூகத்தின் பிரதிநிதிகளில் 50 வீதமானோர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் ஒப்புக்கொள்ளப் படாவிட்டால், இத் தீர்மானமோ அல்லது சட்டப்பிரேரணையோ முதலில் ஏற்ற முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இரண்டாவது அவையின் பெரும்பான்மையான உறுப்பினர்களின அங்கீகாரமும் பெறப்பட்டே நிறைவேற்றப்பட வேண்டும்.

எ. சிறுபான்மை சமூகங்களின் அபிலாசைகள், நலன்கள் தொடர்பான ஏதாவது முக்கியமான திருத்தங்கள் அரசியல் யாப்பில் கொண்டு வரப்படுவதாக இருந்தால், இந்த அவையின் பிரநிதித்துவத்திலும் மூன்றில் இரண்டு பங்கினரின் அங்கீகாரம் பெறபபட வேண்டும்.

ஏ. இதேபோன்ற ஒழுங்குகள், எங்கெல்லாம் தேவையெனக் கருதப்படுகின்றதோ, அந்த மாநில அரசமைப்புகளிலும் ஏற்படுத்தப்படவேண்டும்.

தொடரும்.......

# தலித் அறிக்கை

## இலங்கை தலித் மேம்பாட்டு முன்னணி

உலக மக்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் என்பது அரசு, சொத்து, குடும்பம் எனப் பிரிவினைகள் தோன்றியபோதே நிலை பெறத் தொடங்கியதாக நாம் வரலாறுகள் மூலமாக அறிகிறோம். இவ்வாறான சமூக வேறுபாடுகளை பொருளாதார (வர்க்க) வேறுபாடாகவும், பாலியல் வேறுபாடுகளெனவும் இரு வகையாகப பிரிக்கலாம். இந்த வகையில் உலகிலுள்ள பல சமூகங்களுக்கும், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் சமூகங்களுக்கிடையே அடிப்படை வேறுபாடுகள் உள்ளது. உலக சமூகங்களுக்கிடையேயான பொதுவான வர்க்க, பாலியல் வேறுபாட்டை "வர்ண சாதிய" அடிப்படையில் மாற்றிய நிகழ்வானது இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் சமூகங்களுக்குள்தான் நிலைத்து நீடிக்கிறது.

பிறவியின் அடிப்படையில் தொழில் என்பது உலகில் எல்லா சமூகங்களுக்குள்ளும் நிலவியதொன்றுதான்! ஆனால் "வர்ணச் சமூகமானது" தொழிலை பிறவி அடிப்படையில் ஒதுக்கியது மட்டுமல்லாது. அதற்கென சடங்கு, சம்பிரதாயம் எனும் கோட்பாட்டு நியாயம் வழங்கியதோடு, திருமண உறவுகளையும் சாதிக்குள் முடக்கி அதில் எவ்வித மீறல்களும் நிகழ்ந்து விடாது கட்டிக் காப்பாற்றி வரும் சமூகமாகத் திகழ்வதும் இந்துமத ஆதிக்கம் நிலவும் சமூகங்களில் மட்டுமே.

"புருசன் என்கிற உடலை நான்காக வகுத்து நான்கு வருணங்கள் படைக்கப்பட்டன எனப் பார்ப்பனர்கள் வேதம் படைததனர். பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூததிரர் என்கிற நான்கு வர்ணங்களில் பார்ப்பனர் மேலானவர் சூத்திரர் கீழானவர் என வரிசைப்படுத்தி அவர்களுக்குரிய தொழிலையும் தொடக்ககால வேத (இருக்கு) மதம் முன் மொழிந்ததென்றாலும் இந்த நான்கு வர்ணங்களும் பிறவியோடு இறுக்கமாகத் தொடர்புப் படுத்தப்படவில்லை. கி.மு 185 க்கு பிறகு பௌத்த சமண மதங்களை வீழ்த்திப் பார்ப்பனர்கள் அரியணை ஏறிய பின்பு உருவாக்கப்பட்ட "மனு நீதி" யில் பிறவியோடு தொழில் இணைக்கப்பட்டது. இதன் மூலம் பார்ப்பன "சத்திரியரின் மேலாண்மை உறுதி செய்யப்பட்டது. வருணம் சாதியாக மாறிய கதை இதுதான்" என்கிறார் அம்பேத்கர்.

அம்பேத்கரின் இந்திய "மனுநீதி" யும் வர்ணம் சாதியாக மாறிய கதையின் வளர்ச்சியானது யாழ்ப்பாணத்தில வேர் ஊன்றியதற்கான ஆதாரங்களை "யாழ்ப்பாண வைபவ மாலை" எனும் நூலில் காணலாம். யாழ்ப்பாண இராச்சியமானது 15ஆம் நூற்றாண்டில் போர்த்துகேயரின் 40 வருட ஆட்சிக்குப் பிற்பாடு ஒல்லாந்தர் 1658 இல் யாழ்ப் பாணத்தை கைப்பற்றிய சம்பவம் குறித்து "யாழ்ப்பாண வைபவ மாலையில்" உள்ள கீழ் வரும் செய்யுள் விபரிக்கிறது.

**திருமருவு யாழ்ப்பாண நாட்டையாண்ட**
**சிங்கையாரியன் குலத்தை நீங்க செய்து**
**பெருமையுடன் காவுத்த் யான் மாசம்**
**பிறங்கலெனும் பறங்கிக்கிளை பரசை யாண்டு**
**குருநெறியும் மனுநெறியுமில்லா தாக்கிக்**
**கொடுமையுடன் நாற்பதாண்டளவும் போக்க**
**உருமருவு பூதங்கீர் பிரவுபோல**
**ஒலாந்தேக மன்னவன் வந்துதித்தான்றானே.**

யாழ்ப்பாண நாட்டை ஆட்சி புரிந்த மன்னவர்கள் சிங்கையாரியர் (ஆரியர்) குலத்தைச் சேர்ந்தவர்களென்றும் அவர்கள் குருநெறியும் மனு நீதியும் கொண்ட இந்து மதச்சட்டத்தையே ஆதாரமாகக் கொண்டவர்கள். இவ்வாறான அரசாட்சியை பிலிப்பனெனும் பறங்கியன் கைப்பற்றி 40 வருடங்கள் கொடுமையான ஆட்சி புரிந்தவனென்றும் பிற்பாடு ஒல்லாந்தர்களின் ஆட்சியால் யாழ்ப்பாணம் மீட்கப்பட்டதென்பதாகவும் அச் செய்யுள் உரைக்கிறது. நீதி பரிபாலனத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாண இராச்சியத் தில் மனுநீதி பின்பற்றப்பட வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை கோணேசர் கல்வெட்டு என்னும் நூலிலுள்ள செய்யுள்களிலும் காணக்கூடியதாகவே உள்ளது.

ஆரியச் சக்கரவர்த்தியின் வம்சத்து யாழ்ப்பாண மன்னர்களை சிங்கையாரியர் என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண வைபவ மாலையில் யாழ்பபாணத்தை ஆட்சி புரிந்த ஒன்பது ஆரியச் சர்க்கரவர்த்திகளின் கீழ்வரும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசய கூழங்கச் சர்க்கரவர்த்தி
குல சேகல சிங்கையாரியன்
விக்கிரம சிங்கையாரியன்
விரோதய சிங்கையாரியன்
மார்த்தாண்ட சிங்கையாரியன்
செயவீர சிங்கையாரியன்
குண பூசன சிங்கையாரியன்
குண வீர சிங்கையாரியன்
கனக சூரிய சிங்கையாரியன்
எனும் பெயர் கொண்ட ஆரிய மன்னர்களாகும்.

யாழ்ப்பாண அரசர்களின் இராசதானி முதலாம் சிங்கையாரியனின் காலத்தில நல்லூரில் அமைக்கப்பட்டது. அவ்வரசனை செய சிங்கையாரியனென்று கைலாயமாலை குறிப்பிட்டிருந்தது.

மேலும் நலலூரில் அரசிருக்கையை ஸ்தாபிக்கக் கருதி சோதிடர்கள் தேர்ந்து சொல்லிய நன் முகூர்த்தத்தில அத்திவாரம் போட்டு நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காய் விடுவித்து மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், பூங்காவும், பூங்காவின் நடுவே ஸ்நான மண்டபமும், முப்படை கூடமும் உண்டாக்கி, அக்காலத்தில் யமுனா நதித்தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு நதி, மண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனா வீரிருப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து, தன்னுடன் வந்த காசியுற் பிரமகுல திலகரான செங்காதர ஐயரும், அன்ன பூரணி அமமாள் என்னும் அவர் பத்தினியும் வாசஞ்செய்வதற்கு அக்கிரகாரமும் உண்டாக்கிக் கீழ் திசைக்கு பாதுகாப்பாக பிள்ளையார் கோவிலையும் கட்டுவித்துத் திலகவதியார் என்னும் பத்தினியாருடனே கிரகப் பிரவேசஞ் செய்து வாழ்ந்து வந்தான் முதலாம் சிங்கையாரியன் என மயில்வாகனப் புலவர் கூறியுள்ளார்.

இவ்வாறாக இந்திய - இந்துத்துவ மதக் கோட்பாடுகளுடன் தொடர்ந்து வந்த யாழ்ப்பாண இராச்சியமானது போத்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற ஐரோப்பியர்களின் மேலாதிக்கத்திற்கு மாற்றமடைந்தது. அக்கால கட்டங்களில் அதிகாரி, முதலியார், இறைசுவதோர், கண்காணி, தலையாரி உடையார், வன்னியனார் என யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளால் பதவிப் பெயர்கள் சூட்டப்பட்ட பார்ப்பனர் அல்லாத உயர் சாதியினின் (வெள்ளாள) சமூக மேலாதிக்கத்திற்கு வட-கிழக்கு தமிழர் பிரதேசங்கள் கைமாறியது. இதுவே இந்திய சாதிய படிநிலைக்கும் இலங்கைத் தமிழ் சமூகங்களுக்குமிடையேயான சாதிய படிநிலைக்குமான வித்தியாசங்கள் சாதிய மேலாதிக்க மனோநிலையில் இரண்டுக்குமிடையில் வேறுபாடுகள் காணமுடியாது.

சிங்கையாரிய மன்னர்களின் யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து இன்று வரை தமிழ் மக்களுக்குரிய நீதி பரிபாலன சட்டங்களாக இருப்பது தேச வழமைச் சட்டமாகும். இதில் சமூக ரீதியாக நிலவிய சட்டமானது சாதிய வழமைச்சட்டமாகும். தேச வழமைச் சட்டத்தை எழுத்து வடிவத்தில் சட்டமாக்கியவர் ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த **CLASS ISSAC** என்பவராகும். இவரின் ஆலோசகர்களாகவும் இருந்தவர்கள் யாழ்ப்பாணத்து மேற்குறிப்பிட்ட பதவிப் பெயர்கள் கொண்ட மேலாதிக்கச் சாதியரான முதலியார்களும் உடையார்களுமே.

சிங்கையாரியர்களால் யாழ்ப்பாணத்தில் 10ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் அடிமை குடிமைகளுடன் (தற்போதைய தலித்துக்கள்) வந்து குடியேற்றப்பட்ட வெள்ளாளர்களாலேயே இந்தியாவில் இறுக்கம் பெற்றிருந்த சாதிய அமைப்பு முறையானது யாழ்ப்பாணத்திலும் கட்டிக் காப்பாற்றி வந்ததை வரலாற்று குறிப்புக்கள் மூலமாக நாம் அறிகிறோம். நான்கு வர்ண சாதிகளான பிராமனர், சத்திரியர், வைசிரியர், சூத்திரர் எனப்படுபவர்களிலிருந்து பள்ளர், பறையர், நளவர், அம்பட்டன், வண்ணான் போன்ற சாதியினர் வர்ணசாதிய அமைப்பு முறைக்குள் அடங்காத தீண்டப்படாத சாதிகளாக யாழ்ப்பாண சாதிய வழமையில் கருதப்பட்டு வந்தனர். இந்த ஐந்து சாதிகளைக் குறிக்கும் அடையாளமாகவே யாழ் குடாநாட்டில் பஞ்சமர் எனும் பெயர் நிலவி வந்தது. பலநூறு ஆண்டுகளாக வளர்ந்தெடுக்கபபட்ட சாதிய அமைப்பு முறையானது சங்கிலியன் தொடங்கி பின்னர் ஆறுமுகநாவலர், செர் பொன் இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் வரை வளர்க்கப்பட்டு இன்று தமிழ் தேசியம் எனும் பரிணாமம் கொண்டு ஆயுதங்களுடனும் சாதியத் தீண்டாமை மரபு கட்டிக் காப்பாற்றப்பட்டு வருகிறது. சாதிகளாக பஞ்சமர் சமூகமானது பல வித சமூகக் கொடுமைகளையும், உயிரிழப்புக்களையும் அனுபவித்த வண்ணமாயுள்ளது.

சமூக ரீதியாக பேணிவந்த சாதி வழமைச் சட்டத்தை ஐரோப்பியர்கள் கண்டும் காணாதவாறும் இருந்து வந்துள்ளனர். யாழ் மேலாதிக்க சமூகத்தின் ஆதரவின் அவசியம் கருதியே ஐரோப்பியர்கள் சாதி வழமைச்சட்டத்தை கவனத்தில் கொள்ளவில்லை. இருப்பினும் ஐரோப்பியர்களே வட-கிழக்கு வாழ் தலித் சமூகங்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கான பாதையை திறந்தவர்கள்.

இலங்கையில் ஆண்டாண்டு காலமாக நிகழ்ந்து வரும சாதிப் பாகுபாடும், தீண்டாமை ஒடுக்குமுறையும் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொணடே இருக்கிறது. தமிழர்களது சொந்த நாடான இலங்கையில் மட்டுமல்லாது, புலம் பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலும் தமது புனித மரபுகளை கட்டிக் காப்பாற்றி வருகின்றனர். இந்தச் சாதியச் சமூக சகதிக்குள் வாழ்ந்து கொண்டு பேரினவாதம், மனித உரிமை, மனித நேயம், ஜனநாயகம், என்றெல்லாம் பேசி வருகிறோம்.

இவ்வாறாக இன்று வரை புறநானூற்றுப் புகழ்பாடும் யாழ்ப்பாண சாதிய இராச்சியத்தில் தலித்துகளுக்கு எதிரான சமூக ஒடுக்குமுறைகளுக்கு சட்டரீதியான பாதுகாப்பென்பது நியாயமான முறையில் கடைபிடிக்கப்படவில்லை.

1910ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் சாதிய தீண்டாமை எதிர்ப்புப் போராட்டமானது பல இடையூறுகளு

தொடர்ச்சி 09ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் கேதீஸ்.........

12ம் பக்கத் தொடர்ச்சி

நடைமுறை எம்மில் பலருகக் முன்னுதாரணமாக இருந்தது. ஒவ்வொருவருடைய தனித்துவத்தையும் அவருடைய ஆளுமையையும் அவர் எப்போதும் மதித்துச் செயற்பட்டார். குழந்தைகள் மீது மிக அசாதாரண ஈர்ப்பு அவருக்கு இருந்தது.

தவறுகள் நேர்ந்தால் நெற்றிக்கு நேரே சொல்லிவிடுவார். அவருடைய உடன்பாடின்மையும் கோபமும் முகத்தில் தேங்கி நிற்கும் விடயத்தின பாரதூரத்தை உணர்த்திய மறுகணம் அவர் அன்புடனும் ஆதரவுடனும் பேசத் தொடங்கிவிடுவார். அவருடைய தோற்றத்திற்கும் அவருடைய அஞ்சாமைக்கும் இடையே பாரிய முரண்பாடு ஒன்றிருந்தது.

கேதீஸ் மெல்லிய உடல்வாகு கொண்டவர் தானே என நினைத்துக் கொண்டு தாதாக்கள் போல் நடந்துகொள்ள முற்பட்டவர்கள் அவரது ஆளுமையிலும், பேச்சிலும் கூனிக்குறுகி வெளியேறியதை நான் அறிந்திருக்கிறேன்.

இந்த அஞ்சாமை அவரது இறுதி மூச்சுவரை அப்படியே காணப்பட்டது. தனக்கென எந்த பாதுகாப்பையும் கேதீஸ் தேடிக்கொள்ளவில்லை. தனது வீட்டு கதவிற்கு வந்த கொலைகாரர்களையும் அவர் நேரடியாக எதிர்கொண்ட போதுதான் படுகொலை செய்யப்பட்டார்.

போதையூட்டும், குறுந்தேசிய உணர்வுகள் தன்னை அண்டுவதற்கு கேதீஸ் எப்போதும் இடமளித்ததில்லை. எது நடக்க வேண்டும் எது சமூகத்துக்கு நல்லது என்பன பற்றியே தோழர் கேதீஸ் சிந்தித்தார்.

தமிழ்ச் சமூகத்தில் கற்பிதமாக உருவாக்கப்பட்ட ஏகபிரதிநிதித்துவம் என்ற கருத்தை அவர் அடியோடு நிராகரித்தார். ஏகபிரதிநிதித்துவம் என்ற சொல்லே ஜனநாயக விரோதமானது என்று அவர் கருதியிருந்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவானபோது அவர் என்னென்ன காரணங்களுக்காக நாங்கள் இதனை ஏற்று செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். கட்சியின் மத்தியகுழுவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டால் அந்த முடிவு தொடர்பில் அவர் தெளிவான உறுதி கொண்டிருந்தார். ஒரு முடிவு எடுக்கப்பட்டதன் பின்னர் குழம்பிவிடும், தளம்பிவிடும் பழக்கம் அவரிடம் கிடையாது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் சில சிறந்த காட்சிகள் அவருக்கு மன நிறைவை ஏற்படுத்தியிருந்தன. கிழக்கு சம்மாந்துறை பகுதிக்கு தோழர் பத்மநாபா சகதோழர்களுடன் விஜயம் செய்தபோது ஏராளமான முஸலீம் பெண்களும், ஆண்களும் வரவேற்றனர். ஆரம்பத்தில் நம்பிக்கையொன்று அங்கு காணப்பட்டது. வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் முஸ்லீம், தமிழ் சமூகங்களிடையே பாரிய விரிசல் ஏற்படவில்லை. ஓரளவு நெருடல்கள் இருந்தது உண்மையே. ஆனால் முஸ்லீம் மக்கள் தமிழ் தலைவர்களிடமும் எதிர்பார்த்தார்கள். சமாதானம் ஏற்படும் என்று நம்பிக்கை கொண்டிருந்தார்கள். சம்மாந்துறை நிகழ்வு அவருக்கு மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

பின்னர் சென்னைக்கு திரும்பிய தோழர் கேதீஸ் சிறிது காலம் தான் இயக்கச் செயற்பாடுகளில் இருந்து ஓய்வு எடுத்துக்கொள்வதாக மத்திய குழுவில் தெரிவித்து பின்னர் நோர்வே சென்றார்.

**இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் சில சிறந்த காட்சிகள் அவருக்கு மன நிறைவை ஏற்படுத்திருந்தன. கிழக்கு சம்மாந்துறை பகுதிக்கு தோழர் பத்மநாபா சகதோழர்களுடன் விஜயம் செய்தபோது ஏராளமான முஸ்லீம் பெண்களும், ஆண்களும் வரவேற்றனர். ஆரம்பத்தில் நம்பிக்கையொன்று அங்கு காணப்பட்டது. வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் முஸ்லீம், தமிழ் சமூகங்களிடையே பாரிய விரிசல் ஏற்படவில்லை. ஓரளவு நெருடல்கள் இருந்தது உண்மையே. ஆனால் முஸ்லீம் மக்கள் தமிழ் தலை வர்களிடமும் எதிர்பார்த்தார்கள். சமாதானம் ஏற்படும் என்று நம்பிக்கை கொண்டிருந்தார்கள். சம்மாந்துறை நிகழ்வு அவருக்கு மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.**

நோர்வேயில் அவர் இருந்தபோதும் தனது சமூக அரசியல் ஆர்வங்களை அவர் வெளிப்படுத்தி வந்தார். அக்காலத்தில்தான் ஒஸ்லோவில் ஒரு கருத்தரங்கில் வைத்து தமிழ் பாசிசவாதிகளால் தாக்கப்பட்டார்.

மீண்டும் 90களின் முற்பகுதியில் நாம் மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தபோது டெல்லியில் எமது கட்சியின் சார்பில் செயற்படுவதற்காக தோழர் பத்மநாபாவின் அழைப்பின் பேரில் ஒஸ்லோவில் இருந்து டெல்லி திரும்பியிருந்தார்.

தென்னாசியாவின் மிக முக்கியமான தலைநகரம் என்ற வகையிலும் ஆயிரம் மில்லியன் மக்களின் நாட்டின் தலைநகரம் என்ற வகையிலும டெல்லி மிகவும் ஆர்வத்திற்குரிய இடமாகும். ஜவஹர்லால் நேரு பல்கலைகழகம் பல கீழைத்தேய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடனும் இந்திய மாணவர்களின் சங்கமமாக அமைந்திருந்தது. அதற்கருகாமையிலேயே கேதீஸ் அவர்களின் வதிவிடமும் அமைந்திருந்தது. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பிலும் சமூக அரசியல் விவகாரங்கள் தொடர்பிலும் பல கருத்தரங்குகள் மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் அவ்வப்போது நடத்தப்பட்டிருக்கின்றன. அறிக்கைகள் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

சமூக அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட ஒரு மாணவ- ஆசிரியர் குழாம் அங்கு இருந்தது. தோழர் கேதீஸ் அவர்களுடன் நல்லுறவை பேணினார். அகில இந்திய காங்கிரஸ் கட்சி, இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, டெல்லியை மையமாக கொண்ட கல்விமான்கள் போன்றவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மீண்டும் இலங்கையில சீர்குலைந்து போன அதிகார பகிர்தலுக்கான கருத்தியல் நடைமுறைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். இப்போதுள்ள இலத்திரனியல் வசதிகள் அப்போது இருக்கவில்லை. எனினும் கொழும்புடனும், சென்னையுடனும் தொடர்பு கொண்டு நிலைமைகளை அறிந்து அங்கு அவர் தனது நாளாந்த செயற்பாடுகளை செய்து கொண்டிருந்தார். அறிக்கைகளை தயாரித்தார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, சீ.பி.எம் இன் அன்றைய பொதுச்செயலாளர் சுர்ஜித், தற்போதைய பொதுச்செயலாளர் பிரகாஸ்கரத், மெயின் ஸ்ரீம் (Main [illegible]) ஆசிரியர் சுமித் சர்க்கரவர்த்தி, முதுபெரும் அறிஞரான ஹக்ஷர், நாராயணசாமி உள்ளிட்ட பத்திரிகையாளர்கள், பேராசிரியர் முனி போன்றவர்களிடமும் அவர் தொடர்புகளை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தார்.

90களின் முற்பகுதியில் நான் ஒருதடவை சென்றிருந்த சமயம் இவ்வாறு அறிமுகமானவர்கள் பலரிடமும் அவர் அழைத்துச் சென்றார். அவர் எமது சமூகததின் பிரச்சினைகளை விளங்க வைக்கும் முறை அலாதியானது.

தோழர் பத்மநாபாவும் 12 தோழர்களும் 1990 இன் முற்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட போது சென்னையில் இருந்த நெருக்கடியான சூழ்நிலைகளில் தோழர் கேதீஸ் ஆற்றிய பணி மகத்தானது. அவர் எமது இன்ப துன்பங்கள் எதிர்நோக்கிய சவால்[illegible]



ஒரு ஜனநாயக மாற்று எமது சமூகத்தில் உருவாக்கப்பட வேண்டுமென்று கனவு கண்டவர்.

பின்னர் 1990களின் முற்பகுதியிலேயே கொழும்பிற்கு வந்து ஈ.பி.ஆர்.எல்.எப் இன் செயற்பாடுகளில் இணைந்து கொண்டார். "தமிழ் கார்டியன்" என்ற பத்திரிகை மாதாந்தம் அவரின் ஆக்கமாக வெளிக்கொணரப்பட்டது. 1990இன் முற்பகுதியில இலங்கையில் நிலவிய சூழ்நிலையில் பலவேறு சிரமங்கள் அசௌகரியங்களுக்கு மத்தியில் அரசியல் கட்சியினர், சிவில் சமூகத்தினர் கல்வி மான்கள், ஊடகவியலாளர்கள் என பலதரப்பாரோடும் தொடர்பு பட்டு தோழர் கேதீஸ் செயற்பட்டார்.

அன்றைய ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமைத்துவத்தில் இருந்த பல குறைபாடுகளை கேதீஸ் தீவிரமாக விமர்சித்தார். இதன் தொடர்ச்சியாகவே அவர் வெளியேறி கொழும்பு பல்கலைகழக அரசியல் விஞ்ஞான பீடத்தில் சிறிது காலம் பணியாற்றினார். வீரகேசரியின சகோதர ஏடாக வெளிவந்த வீக்கண்ட் எக்ஸ்பிரஸ் (Weeke[illegible]pr) [illegible]கையின் ஆசிரியராக கடமையாற்றினார். அப்போதே "சத்தியா" என்ற புனை பெயரிலான அவரது பத்திக்கள் வெளிவரத் தொடங்கின. பிரதானமாக அதிகாரப் பகிர்வு ,தேச நிர்மாணம், ஜனநாயகம், மனித உரிமை ஆகியன அவரின் எழுத்துக்களில் பிரதிபலித்தன.

அவர் கொழும்பு பல்கலைகழகத்தில் அரசியல் விஞ்ஞான பீடத்தில் கடமையாற்றிய காலத்தில்தான் இழந்த சந்தர்ப்பங்கள் என்ற அவரது நூல் எழுதப்பட்டதாகக் கருதுகிறேன் புலமைபரிசில் பெற்று அமெரிக்கா சென்றிருந்த கேதீஸ் திரும்பி வந்ததன் பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் இன முரண்பாடுகள் பற்றிய பிரிவில் தனது பணியினை ஆரம்பித்தார். அவர் எமது கட்சியில் இருந்து வெளியேறிச் சென்ற போதும் பொதுவாக இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளினதும் குறிப்பாக எமது செயற்பாடுகள் தொடர்பாகவும் கூரிய அவதானத்தைக் கொண்டிருந்தார். நாம் தவறிழைக்கும் போது தயவு தாட்சணியம் இல்லாமல் விமர்சிக்கவும் தவறவில்லை. நாம் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது எம்மை உற்சாகப்படுத்தவும் தவறவில்லை. நாங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான தனது அபிப்பிராயங்களை நேரடியாகவும் தொலைபேசி மூலமோ, அல்லது ஈ-மெயில் மூலமோ எமக்கு சொல்லிக் கொண்டுதான் இருந்தார்.

கோஷ்டி உணர்வுகளைக் கடந்த மாற்று அறிவார்ந்த தலைமை தமிழர்களுக்கு ஏற்பட வேண்டும் என்று அவர் கனவு கண்டார். வெவ்வேறு கருத்து நிலை உள்ளவர்களுடனும் அவர் உறவைப் பேணினார். அவர் தான் வரிந்துகொண்ட பாதையில் பயணப்பட்டபோது வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தலை சிறந்த மனிதர்களை அவர் எங்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். எமது மனங்களில் மானிட தளமொன்றை நிர்மாணிப்பதில் அவர் பணியாற்றியிருக்கிறார். பன்முகை ஆளுமை கொண்டவராக அவர் காணப்பட்டார்.

ஏகபிரதிநிதித்துவத்தையோ அல்லது ஏகமாற்றையோ அல்லது அரைகுறை ஜனநாயகத்தையே அவர் ஏற்றுக்கொண்டவரல்ல. கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களின் மறைவு தொ[illegible] அவர் எழுதிய கட்டுரையொன்றின் தலையங்கம் "வாழ்வை கொண்டாடுவோம். மரணத்தையல்ல" என்பதுதான்.

பேராசிரியர் ரஜனி திரணகம, நீலன் திருச்செலவம், தோழர் கேதீஸ் போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டதால் நாம் எதையெல்லாம் இழந்திருக்கிறோம் எங்களுக்கு என்ன நேர்ந்திருக்கிறது என்பது பற்றிய பிரக்ஞை இல்லாமலே எமது சமூகம் வாழ்ந்து கொண்டும், அழிந்து கொண்டும் இருக்கிறது.

இன்று வாழிடங்களை இழந்து தமிழ் சமூகத்தின் ஒரு பகுதி நடுத் தெருவிற்கு வந்திருக்கிறது. நாளும் பொழுதும் மனிதப் படுகொலைகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. கொலை விருட்சம் ஒன்று ஸ்தாபகமாகி இருக்கிறது. போரிடுபவர்களுக்கு அப்பால் சாதாரண மக்களின் வாழ்வு [illegible]ருக்கிறது.

தோழர் கேதீஸ் தனது இறுதி நாட்களில் இலங்கையின் சமாதான செயலகத்தில் பணியாற்ற ஆரம்பித்திருந்தார். அதிகாரப் பகிர்வினோடு தேச நிர்மாணம் என்ற கனவிற்கும் இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பான மையமான விடயங்களில் செயற்படுவதற்கும், இலங்கை சமாதான செயலகத்தில் செயற்படுவது பலனளிக்கும் என்று கருதியிருந்தார்.

அவர் மரணிப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவும் அதற்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான நிபுணர் குழுவும் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில தோழர் கேதீஸ் அவர்களும் சமாதான செயலக பிரதிநிதியென்ற வகையில் பங்குபற்றியிருந்தார்.

தற்போது நிபுணர்கள் குழுவில் பெரும்பான்மையினரதும், அனைத்து கட்சி பிரதிநிதிகளின் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான முன்மொழிவுகள் வெளிவந்து விட்டன. வடக்கு- கிழக்கில் இருந்தும் மலையகத்தில் இருந்தும் தீர்வு ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. எதிர்மறையான சிந்தனைகளை தவிர்த்து ஆக்கபூர்வமாக ஒரு தீர்வு வெளிவருவதில் இலங்கையின் சகல தேசிய சமூகங்களின் தலைவர்களும் ஒன்றுபடுவதற்கான அவசியம் வந்துள்ளது. யார் ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லையோ குறிப்பாக தமிழ் மக்களும் இலங்கையின் அனைத்து தேசிய சமூகங்களும் பெருமளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு பிரசவமாக வேண்டிய நேரமிது. இதில் காலம் தாழ்த்துதல் எதுவும் இருக்கக்கூடாது.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பகுதி இந்த நாடு யுத்தத்திலும், அழிவிலும்தான் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. இடையிடையே சமாதான நம்பிக்கைகள் தெரிந்தாலும் பெரும்பாலான காலம் அமைதியற்றதாக இலஙகையர்களின் வாழ்வு கழிந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு தொடர்ந்து வாழ முடியாது. தோழர் கேதீஸ் கூறிய "வாழ்க்கையை கொண்டாடுவோம் மரணத்தையல்ல" என்ற வார்த்தைகள் முக்கியமானவை.

இலங்கையில் அதிதீவிரவாத சிந்தனைகள் இல்லாத பெருவாரியான மக்களும் இந்தியா உட்பட சர்வதேச சமூகமும் இலங்கையில் நிரந்தரமான அமைதியையும் சமாதானத்தையும் எதிர்பார்க்கிறார்கள்.

எனவே பாதிக்கப்பட்ட சமூகங்களின் பெருவாரியானவர்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் விதமான நிரந்தர தீர்வொன்றை முன்வைப்பது வன்முறைகளில் இருந்தும் அராஜகத்தில் இருந்தும் மீள்வதற்கான முதல் நிபந்தனையாகும்.

மனித உரிமைகள் உயர் நிலையில் பேணப்பட்டு, ஜனநாயகம் உறுதிபடுத்தப்பட்ட நிலையில், நாகரீகமான, சுயமரியாதை, கௌரவத்துடன் இலங்கையின் தேசிய சமூகங்கள் ஐக்கியமாக வாழும் தேசமொன்றை கட்டியெழுப்புவதே தோழர் கேதீஸிற்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். இனங்களின் சம உரிமையுடன் ஐக்கிய இலங்கை என்பதே அவரின் வாழ் நாள் கனவாக இருந்தது.

தோழமையுடன்
தி-ஸ்ரீதரன் (சுகு)
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் கேதீஸ் நினைவு நாள் ஆகஸ்ட்–12

**தோழர் கேதீஸ் படுகொலை செய்யப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. மானிடப் பேரவலம் வியாபித்துவிட்ட எமது தேசத்தில் அதிகாரப் பகிர்வையும் இலங்கையில் தேச நிர்மாணத்தையும் மனித உரிமை, ஜனநாயகம் நிலை நிறுத்தப்படுவதையும் தனது இறுதி மூச்சு வரையிலான கனவாக கொண்டு வாழ்ந்தவர் கேதீஸ்.**

அதிகாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையும் வெளிவரவுள்ள சூழ்நிலையில் விவாதங்கள் கலந்துரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் தோழர் கேதீஸின் பங்களிப்பை நினைத்துப் பார்க்கிறோம். அதிகார பகிர்வு, ஜனநாயகம் தொடர்பான சிந்தனைகளும், கருத்துக்களும், செயற்பாடுகளும் தோழர் கேதீசிற்கு எப்போதும் பேரார்வம் ஊட்டுவதாக அமைந்திருந்தன. இழந்து விட்ட சந்தர்ப்பங்கள் பற்றி அவர் எழுதிய நூலும், "சத்தியா" என்ற புனை பெயரில் இலங்கை ஊடகங்களில் அவர் எழுதி வந்த பத்திகளும் இதனை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தன.

தோழர்களே! நண்பர்களே! நாம் எதை இழந்திருக்கிறோம் என்ற பிரமையில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கட்டுமீறி போன மனித அவலங்கள் மத்தியில் தோழர் கேதீசின் வெற்றிடம் எம் உள்ளங்களில் அடிக்கடி தோன்றிக் கொண்டே இருக்கிறது.

தோழர்களே! நண்பர்களே! 1980 களின் முற்பகுதியில் யாழ் செம்மண் பிரதேசங்களில் சாதி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட கூலி விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் தோழர் கேதீசை முதன் முதலாக சந்திக்க நேர்ந்தது. அவருடன் இலங்கையின் காலஞ்சென்ற இளம் புத்திஜீவி நியூட்டன் குணசிங்காவும் இன்னுமொருவரும் வந்திருந்தனர். யாழ். திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள பல்கலைகழக ஆசிரியர்களுக்கான விடுதியொன்றில் எமது சந்திப்பு நிகழ்ந்தது.

கிராமிய தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் தொழிற்சங்க வேலையில் ஈடுபட்டிருந்த ஒரு அமைப்பினருடன் அந்த கலந்துரையாடலில் நான் பங்குபற்றினேன். ஈழ மாணவர் பொது மன்றத்தின் அங்கத்தவராக இருந்தேன் கனவுகள் நிரம்பிய காலம் அது. தமிழ் தேசிய




விடுதலை என்பது சமூக பொருளாதார விடுதலையில் இருந்து பிரிக்க முடியாதது என நாம் திடமாக நம்பினோம். மக்களை சந்தித்தலும் (குறிப்பாக இளைஞர்களையும் மாணவர்களையும்) வாசித்தலும், எமது கொள்கைகள், செயற்பாடுகளை விளக்கி பத்திரிகை விநியோகித்தலும் கருத்தரங்குகள் நடத்துதலும், சுவரொட்டி பிரச்சாரங்களை மேற்கொள்வதும் எமது செயற்பாடுகளாக இருந்தன.

ஒரு பன்முகப்பட்ட இயங்குதளம் அன்று காணபட்டது. பல்வேறு விதமான போக்குகள் மத்தியிலும் சமூக சாதகமான போக்கொன்று மெல்லிய இழையாக ஓடிக்கொண்டிருந்தது.

ஈழ மாணவர் பொது மன்றம் பல்வேறு சமூக சாதகமான அரசியல் சமூக இயக்கங்களுடன் இணைந்து வடக்கு கிழக்கின் பாரம்பரியமான பெரிய கட்சிகளுக்கு நிகராக அங்கு பிரமாண்டமான மேதின நிகழ்ச்சிகளை, மனித உரிமை மீறல்களுக்கு எதிரான எதிர்ப்பு இயக்கங்களை நடத்திக் கொண்டிருந்தது.

மறுபுறம் யாழ் பல்கலைகழகம் குறிப்பிடத் தகுந்த அளவில் அவ்வப்போது நடைபெறும் தேசிய ஒடுக்குமுறை சார்ந்த ஜனநாயக விரோத மனித உரிமைகளுக்கு விரோதமான செயற்பாடுகளுக்கு எதிராக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தது.

தவிர 1980 களின் முற்பகுதியில் வடக்கு கிழக்கில் குறிப்பாக யாழில் சமூக பிரக்ஞையுள்ள திரைப்படங்கள், நாடகங்கள், கவிதா நிகழ்வுகள், பெண்களின் உரிமைகள் தொடர்பான கண்காட்சிகள், கால்மார்க்ஸ் நூற்றாண்டு நிகழ்ச்சிகள் பாரதி நூற்றாண்டு நிகழ்ச்சிகள் என பல அம்சங்கள் காணப்பட்டன. தேசிய விடுதலை இயக்கம் எப்படி அமைய வேண்டும் என்ற அனல் பறக்கும் விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

அடுத்தடுத்து வந்த இன வன்முறைகள் பயங்கரவாத தடைச்சட்டம் இவற்றின் அன்றாட கெடுபிடிகள் பயங்கரங்களுடன் இந்த செயற்பாடுகள் சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தன.

மறுபுறம் ஆயுத போராட்டத்தின் கூறுகளும் ஆங்காங்கே வெளிப்படத் தொடங்கியிருந்தன.

நாம் ஒரு வெகுஜன இயக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதில் சாதி, பெண்ணுரிமை, வர்க்கம் என்ற கருத்து நிலைகள் உள்வாங்கப்பட்டு அது யதார்த்தமாக்கப்பட வேண்டும் என்று நாம் விருப்பார்வம் கொண்டிருந்தோம். இவற்றுக்கான செயற்பாட்டிலும் ஈடுபட்டிருந்தோம்.

இத்தகைய ஒரு காலகட்டத்தில்தான் நாம் தோழர் கேதீஸை சந்தித்தோம் கொழும்பு சமூக ஆய்வு மன்றத்தில் ஓர் அங்கத்தவராக செயற்பட்ட கல்விமானான கேதீஸ் எமது கருத்துக்கள் மீதும் ஈடுபாடு காண்பித்தார்.

அவர் பின்னாளில் எமது ஸ்தாபனத்தில் இணைந்து கொண்டு மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல், சமூக பணிகளை ஆற்றினார். இயல்பாகவே அவர் எம்முடன் இணையும் நிகழ்ச்சிப் போக்கு நிகழ்ந்தது.

அபிவிருத்தி, ஆய்வு, கல்வி, தொடர்பாடலுக்கான நிலையமொன்றை அவர் யாழ் சிறாம்பியடி ஒழுங்கையில் நடத்தி வந்தார். அந்த நிலையத்தில் எமது சமூக அரசியல் செயற்பாடுகளுக்கான காரியாலயமாக செயற்படுவதற்கான இடைவெளியையும் கொண்டிருந்தது. தோழர் கேதீஸ் மிக இயல்பாகவே அதை அனுமதித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் மிகவும் செல்வாக்குமிக்க பின்புலத்தில் இருந்து வந்த கேதீஸ் கோவில் வீதியில் மனைவியாருடன் வசித்து வந்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நள்ளிரவு கைதுகள் நிகழும் நாட்களில், வீதியில் யாரும் எப்போதும் அநாதரவாக சுடப்படலாம் எனக் கருதப்பட்ட அந்த ஆரம்ப நாட்களில் அவருடைய காரியாலயத்தில் எமது சமூக அரசியல், மனித உரிமை செயற்பாடுகளுக்கான அனுமதியை வழங்கியிருந்தார். அந்த நாட்களில் இது மிகவும் ஆபத்தான காரியம்.

எமது வெகுஜனங்களை அணிதிரட்டும் செயறபாடுகள் தொடர்பான ஆலோசனைகளை, கருத்துக்களை தேசிய விடுதலை, இனங்களின் சுய நிர்ணயம் வெவ்வேறு சமூகப்பிரிவினரை அணி திரட்டுதல் போன்ற விடயங்களை அவருடன் காலநேரம் பாராமல் எப்போதும் கலந்துரையாடக் கூடியதாக இருந்தது. அவர் மெதுவாக எம்மில் ஒருவராக மாறிக்கொண்டிருந்தார்.



**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, சீ.பி.எம் இன் அன்றைய பொதுச்செயலாளர் சுர்ஜீத், தற்போதைய பொதுச்செயலாளர் பிரகாஸ்கரத், மெயின் ஸ்ரீம் (Main Stream) ஆசிரியர் சுமித் சக்கரவர்த்தி, முதுபெரும் அறிஞரான ஹக்ஷர், நாராயணசாமி உள்ளிட்ட பத்திரிகையாளர்கள், பேராசிரியர் முனி போன்றவர்களிடமும் அவர் தொடர்புகளை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தார்.**

அக்காலங்களில் தென்னிலங்கையில் இருந்து இன உறவை நாடும் சமூக அரசியல் பிரக்ஞை கொண்ட மனிதர்கள் அவ்வப்போது யாழ்ப்பாணம் வருவர். வணபிதா போல் கஸ்பஸ் தலைமையிலான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின ஒரு குழுவினர் "யாழ்ப்பாணத்தில் அரச பயங்கரவாதம்" என்ற பிரசுரமொன்றை ஆங்கிலத்தில் அச்சடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து யாழ் அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள், பல்கலைகழக மாணவர்களை நல்லூரடியில் அமைந்திருந்த தோழர் பரராஜசிங்கம் அவர்களின வீட்டில் பார்த்து கலந்துரையாடியது ஞாபகம்.

அதேபோல் பற்றிரிக் பெர்ணாண்டோ தென்னிலங்கை விவசாயிகள் சங்கமொன்றையும் சிறிய இடதுசாரி இயக்கமொன்றையும் பிரதிநிதித்துவப் படுத்தியவர். இவர் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து சில கருத்தரங்குகளை ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடத்தியிருக்கிறார்கள். நல்லூரைச் சேர்ந்த மனித உரிமை, ஜனநாயகம், சமூக மாற்ற ஆர்வம் கொண்டவருமான காலஞ்சென்ற குகமூர்த்தி அவர்கள் சில சந்தர்ப்பங்களில் யாழ் ஸ்டான்லி வீதி புத்தகசாலையில் கடமையாற்றிய தோழர் மணியம் போன்றவர்கள் இந்த கருத்தரங்களுக்கான ஏற்பாடுகளை செய்ததாக ஞாபகம்.

சிங்களவர்களும், தமிழர்களும் சேர்ந்து புரட்சியொன்றை செய்வோம் என்று கருதிய துடிப்பும் இளமையும் கொண்ட உட்டுவரகே ஹென்றி பெரேராவும் இக்கால கட்டத்தில் யாழ்ப்பாணம் வந்து சென்றார். இவரும் பின்னாளில் புலிகள் வன்னிப் பகுதியில் புளொட் மீது நடத்திய தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் அந் நாட்களில் புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் என்ற நாலாம் அகில குழுவைச் சேர்ந்த கீர்த்தி பாலசூரிய, ஆனந்த வக்கும்பர, விஜய டயஸ் போன்றவர்கள் தேசங்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி கருத்தரங்குகள் நடத்தியிருக்கிறார்கள்.

காலஞ்சென்ற பேராசிரியரும், இலங்கை சமசமாஜக் கட்சியின் மூத்த அங்கத்தவருமான றெஜி சிறீவர்த்தனா போன்ற கல்வியாளர்களும் யாழ்ப்பாணம் விஜயம் செய்து பல்கலைகழக மட்டத்தில் உறவுகளை பேணியிருக்கிறார்கள்.

இக்காலப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப் இற்கும் பின்னாளில் மாற்று அமைப்பினரான பெயருடன் எம்முடன் அக்காலகட்டத்தில் இணைந்து செயற்பட்ட தயான் ஜெயதிலக்க, புல்சாரா நயானிலியனகே போன்றவர்களும் யாழ்ப்பாணம் விஜயம் செய்தனர். லத்தீன் அமெரிக்காவில் குறிப்பாக நிக்கரகுவாவில் ஏற்பட்டிருந்த சமூக அரசியல் மாற்றங்கள் தொடர்பான தகவல்களுடன் வந்திருந்த தயான் ஜெயதிலக்க யாழ் பல்கலைகழக மறுமலர்ச்சி கழகத்திலும் பின்னர் கேதீஸின் நிறுவனமான அபிவிருத்தி ஆய்வு கல்வி மற்றும் தொடர்பாடலுக்கான நிலையத்திலும் லத்தீன் அமெரிக்க அனுபவங்கள் பற்றி கருத்தரங்குகளை நிகழ்த்தினார்.

தோழர் கேதீஸின் வீட்டில் தோழர் பத்மநாபா உட்பட தென்னிலங்கையில் இருந்த வந்த குழுவினருடன் கலந்துரையாடல் நிகழ்த்தினோம். மிகவும் ஆபத்தான இரவு நேரத்தில் அங்கு அதனை நிகழ்த்தினோம்.

தெற்கில் அதிகார பகிர்ந்தளிப்பு தொடர்பிலும், தேச நிர்மாணம் தொடர்பிலும், சமூக பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பிலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்த சமூக ஆய்வாளர் மன்றத்தைச் சேர்ந்த குமாரி ஜெயவர்த்தனா போன்றவர்களை கேதீஸ் எமக்கு அறிமுகப்படுத்தினார். 1977, 80 களின் முற்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட இனரீதியான இடைவெளிகளுக்கு மத்தியில் தெற்கிற்கும் வடக்கிற்கும் இடையே புரிதல் இருக்க வேண்டும் எனபதில் கேதீஸ் இடையறாது ஆர்வம் கொண்டிருந்தார்.

1983 பின் எழுந்த சூழ்நிலைகளில் அவர் நெதர்லாந்திற்கு கல்வி நோக்கங்களுக்காகச் சென்றிருந்தார். 1984 இன் முற்பகுதியில் ஈழப் போராட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் என்றவொரு சிறு கைநூலை ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்தார். தான் சென்னைக்கு வந்து முழுநேரமாக ஈ.பி.ஆர்.எல்.எப் இல் செயற்படுவதற்கான தனது ஆர்வத்தை அவர் தோழர் பத்மநாபாவிற்கு தெரியப்படுத்தியிருந்தார்.

வறுமையும், துன்பமும்- எல்லாவற்றுக்கு மேலாக நம்பிக்கையும் நிறைந்த அந்த வாழ்க்கைக்கு அவர் தயாரானார். சென்னை கோடம்பாக்கத்தில் சர்க்காரியா காலனியில் ஒரு தொடர்மாடி குடியிருப்பில் வசித்துக்கொண்டு அவர் முழுநேரமாகச் செயற்பட்டார். அவரது மனைவியார் பவானி அப்பலோ மருத்துவமனையில் ஒரு வரவேற்பாளராக கடமையாற்றிக் கொண்டு ஏதோவொரு அளவில் அன்றாட பொருளாதார சவால்களை எதிர்கொண்டு வாழ தலைப்பட்டனர். தோழர்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய கட்சியிடமும் பொருளாதார வளம் இருக்கவில்லை. இக்காலக் கட்டத்தில் இன் முகத்துடன் அசாதாரண தன்னம்பிக்கையுடன் அவர் பணியாற்றினார். ஆங்கிலத்தில் வெளிவந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இன் பல கட்டுரைகள் அறிக்கைகள் தோழர் கேதீஸால் வடிவமைக்கப்பட்டவை. திம்புவிலும், டெல்லியிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் சக கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதிலும் கருத்துக்களை முன்வைப்பதிலும் கூட்டுச் செயற்பாடுகளில் அம்சங்களை மிகத் திறமையாக அவர் நெறிப்படுத்தினார்.

ஜனநாயக எண்ணங்கொண்ட தோழர் கேதீஸ் தோழர்களுடன் எப்போதும் பிரபுத்துவ உறவு முறைகளை கொண்டிருக்கவில்லை. அவருடைய

தொடர்ச்சி 11ம் பக்கம்

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org